**<u>பொ.து.நக.எண்.பி15/17586 /2015</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.05.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.223/2015 **பொருள் எண்.01**

**<u>ஓய்வூதியம் – அகவிலைப்படி 01.01.2015 முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படி சென்னை மாநகராட்சி ஓய்வூதிர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு வழங்க அனுமதி</u>**

அரசாணை எண். 128, நிதித் (ஓய்வூதியம்) துறை நாள். 27.04.2015 ன் படி ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு 01.01.2015 முதல் அகவிலைப்படி 107 விழுக்காட்டிலிருந்து 113 விழுக்காடாக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வரசாணை உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொருந்துமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் 17246 ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள் உள்ளனர். இவ்வரசாணையை நடைமுறைப்படுத்தி திருத்தப்பட்ட அகவிலைப்படி வழங்க ஒரு மாதத்திற்கு ரூ.49.62 இலட்சம் கூடுதல் செலவாகும். நடப்பு நிதியாண்டிற்கு (01.04.2015 முதல் 31.03.2016 வரை) மட்டும் செலவாகும் கூடுதல் தொகை ரூ.5.95 கோடி ஆகும்.

அரசாணை எண். 128, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள். 27.04.2015ன்படி திருத்தப்பட்ட அகவிலைப்படி 107 விழுக்காட்டிலிருந்து 113 விழுக்காடாக சென்னை மாநகராட்சியில் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு வழங்க அரசாணை அமலாக்கம் செய்ய நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“21.05.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.117/2015, நாள்.21.05.2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**நி.ம.உ.து.ந.க. எண் DA-1(எல்இ1)/3811/14**

**முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.05.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.224/2015 **பொருள் எண்.02**

**தானபத்திரம்**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–5, வார்டு–58, பழைய எண்.69/2, புதிய எண்.34, அண்டர்ஸ் சாலை, சூளை, சென்னை–112, ஆர்.எஸ். எண்.938/7, பிளாக் எண்.18, புரசைவாக்கம் கிராமத்தில் குடியிருப்பு கட்டிடம் கட்ட அனுமதி வேண்டியும், அந்த இடத்தை ஒட்டிய நாராயண குரு சாலை ''சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம்–2ன்'' மூலம் இச்சாலையை 13.72 மீட்டர் அகலத்திலிருந்து 24.00 மீட்டர் அகலமாக விரிவாக்கம் செய்யப்பட வேண்டும் என்றும், மேற்படி மனையின் உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக 5.14 மீட்டர் அகலத்திற்கும், 5.33 மீட்டர் நீளத்திற்கும் உள்ள இடத்தினை தான பத்திரம் மூலம் சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும் என தெரிவித்து மண்டலம்–5ல் வார்டுக் குழு மூலம் பரிந்துரை செய்து மண்டல அலுவலர், மண்டலம்–5 அவர்களின் குறிப்பின் மூலம் கோப்பு இத்துறைக்கு வரப்பெற்றுள்ளது.

தனிவட்டாட்சியர்/நிமஉது–ன் 15.12.2014 நாளிட்ட புலத்தணிக்கை அறிக்கையில் மேற்படி புரசைவாக்கம்–வேப்பேரி நெடுஞ்சாலை எதிர்காலத்தில் விரிவாக்கம் செய்யும் போது சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் கட்டிடம் அனுமதி நிபந்தனை அடிப்படையில் கட்டிடம் கட்டும் போது முன்புறம் கூடுதலாக இடம் காலியாக விட வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கலாம் எனவும், மேற்படி நகர நில அளவை எண்.938/7–க்கான(Quit Rent - விடுவரி–உரிமைத் துறப்பு வரி) ரூ.10/– வீதம் திரு.வில்லியம்ஸ் டைமன்ஸ் என்பவர் விடு வரி, உரிமைத் துறப்பு வரி புரசைவாக்கம் வட்டாட்சியர் அலுவலகத்தில் செலுத்தியதற்கான இரசீது இணைக்கப்படவில்லை.

மேற்படி புரசைவாக்கம்–வேப்பேரி அண்டர்ஸ் சாலை ஒட்டினார் போல் பட்டா நகலில் வரைப்படத்தில் 3.2 மீ, 1.8 மீ ஆக மொத்தம் 5 மீ. அளவு பதியப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரர் 5.14 மீ என தவறுதலாக தெரிவித்து பரப்பு கணக்கீடு செய்து தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், இதனை சரி செய்து சரியான பரப்பு எவ்வளவு என்பதையும் இதற்கான வரைப்படத்தையும் பெறப்பட்டப் பின்னரே மேற்படி இடத்தினை விரிவாக்கத்திற்காக தானப் பத்திரம் மூலம் பெற நடவடிக்கை மேற்கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட புலத்தணிக்கையில் தெரிவித்துள்ளவாறு விண்ணப்பதாரரிடமிருந்து இந்நிலத்திற்கு விடுவரி (Quit Rent) நாளது தேதி வரையில் கட்டியதற்கான இரசீது பெறப்பட்டது. மேலும் திருத்தப்பட்ட வரைப்படம் 5 மீ. + 5.33 மீ. ஆக மொத்த பரப்பளவு 26.55 ச.மீ. மனுதாரரிடமிருந்து பெறப்பட்டது.

எனவே, சாலையை விரிவாக்கம் செய்யும் பொருட்டு மன்றத்துறை மூலம் தீர்மானம் பெறுவதற்கும், மேலும் தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் செலவீனத் தொகை ரூ.46,300/–ஐ கட்டிட உரிமையாளரிடம் வசூலிப்பதற்கும் நிலைக்குழு(நகரமைப்பு)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டம் 14.05.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு 26.05.2015 அன்று தீர்மான எண்.13/2015ன்படி இதற்கு நிலைக்குழு(நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ.DA-1/0501/2015**

**முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.05.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.225/2015 **பொருள் எண்.03**

**தானபத்திரம்**

திரு.கோ.மவுலி சங்கர் மற்றும் இரண்டு நபர்கள், மாம்பலம் வட்டம், மேற்கு மாம்பலம், புலியூர் கிராமம், சர்வே எண்.20/20 கதவு எண்.87/20, ஆரிய கவுடா ரோடு, கோடம்பாக்கம், சென்னை–24 என்ற முகவரியில் சாலை விரிவாக்கத்திற்காக திட்ட மற்றும் கட்டிட அனுமதி கோரி விண்ணப்ப எண். PPA/WDCN10/05273/2014, நாள்:30.07.2014.–ன் மூலம் விண்ணப்பத்திருந்தார்.

தனிவட்டாட்சியர்/நிமஉது அவர்களின் 06.02.2015–ஆம் நாளிட்ட புலத்தணிக்கையில் மேற்கண்ட விண்ணப்பதாரர் விண்ணப்பித்துள்ள மனை டி.எஸ்.எண்.20/1 பைமாஸ் எண்.109ல் 572, ஆரிய கவுடா ரோடு, புலியூர் கிராமம், மேற்கு மாம்பலம் என்ற முகவரியில் கிழக்கிலிருந்து மேற்கு வரை 92 அடி வடக்கிலிருந்து தெற்கு வரை 27 அடி காலி மனையினை பத்திர எண்.300, நாள்.17.02.1978ன்படி திரு.ஜகந்நாத ஐயங்கார் த/பெ. காரைக்குடி சீனிவாச ஐயங்கார் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார். பத்திர நகல் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி புலத்தில் தற்போது தளம் போட்ட வீடு கட்டப்பட்டுள்ளது. எக்மோர்–நுங்கம்பாக்கம் வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட நகர நில பதிவேட்டு நகலில் பிளாக் எண்.48, புலியூர் கிராமம், சர்வே எண்.20/20 விஸ்தீரணம் ஒரு கிரவுண்ட் 84 ச.அடி கொண்ட நிலம் திரு.என்.கோபாலன் என்பவரின் பெயரில் பதிவாகியுள்ளது. சி.ஏ.எண்.141/80–81, நாள்: 29.08.1980–ன் நகல் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி திரு.என். கோபாலன் என்பவர் பத்திர பதிவு எண்.21, நாள்: 22.02.1994–ன்படி தன்னுடைய மனைவி திருமதி. சாரதா மற்றும் மகன்கள் திரு.மவுலி சங்கர் மற்றும் ராஜசேகர் மற்றும் மகள் திருமதி.ஐ. இந்திரா என்பவர்களின் பெயரில் உயில் சாசனம் பதிவு செய்துள்ளார். திரு. என்.கோபாலன் என்பவர் 07.11.2004 அன்று காலமாகிவிட்டார். திருமதி. ஐ. சாரதா 20.06.2009 அன்று காலமாகிவிட்டார். மேற்படி இறந்த தம்பதியர்களுக்கு இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகள் மட்டுமே வாரிசதாரர்கள் என மாம்பலம்–கிண்டி வட்டாட்சியரால் நி.மு.எண்.ஈ1/21529/2009, நாள்:05.08.2009–ன்படி வாரிசு சான்று வழங்கப்பட்டுள்ளது. எனவே, திரு.மவுலி சங்கர் மற்றும் இரு நபர்கள் மேற்படி புலத்திற்கு கட்டிட அனுமதி கோரி மனு செய்துள்ளனர்.

மேற்படி புலத்தில் அமையப்பெற்றுள்ள தளம் போட்ட வீட்டினை இடித்துவிட்டு புதியதாக கட்டிடம் கட்டுவதற்கு சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம்–II -ன்படி ஆரிய கவுடா ரோடு 18 மீட்டர் சாலையாக விரிவாக்கம் செய்யப்பட வேண்டும் என்பதால் திரு. கோ.மவுலி சங்கர் மற்றும் இரண்டு நபர்கள் கட்டிட அனுமதி கோரி மனு அளித்ததின் பேரில் சாலை விரிவாக்கத்திற்காக 8.23மீ x 1.49மீ = 12.26 ச.மீ. நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலமாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளனர். இந்நிலத்தை மன்றத்தின் ஒப்புதல் மூலம் மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்வதற்கு மண்டலம்–10ல் பரிந்துரை செய்து வார்டுக் குழு தீர்மானம் எண்.2154 நாள்.22.09.2014 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேற்படி நிலத்தினை தானமாக பெற நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி கோரப்பட்டுள்ளதால் மேற்படி தளம் போட்ட வீட்டின் முன்புறத்தில் சிமெண்ட் ஷீட் மூலம் மூடப்பட்ட காலி இடம் மற்றும காம்பவுண்ட் சுவர் காணப்படும் புலத்தினை மனுதாரர் தானப்பத்திரம் மூலமாக சென்னை மாநகராட்சிக்கு வழங்க இசைவு தெரிவித்துள்ளார்.

மேற்படி புலத்தை அளவீடு செய்ததில் 8.23 மீட்டர் அகலமும், 1 புறம் 1.30 மீட்டர் மறுபுறம் 1.49 மீட்டர் நீளத்திற்கு இடம் காலியாக உள்ளது. எனவே, இதனை சாலை விரிவாக்கத்திற்காக தானப்பத்திரம் மூலமாக சென்னை மாநகராட்சி வசம் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவித்துள்ளதின் அடிப்படையில் அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே,

1. கதவு எண்.87/20 ஆரிய கவுடா ரோடு, கோடம்பாக்கம், சென்னை–24 மண்டலம்–10, வார்டு–135, டி.எஸ்.எண்.20/1 பைமாஸ் எண்.109–ல் 572 ஆரிய கவுடா ரோடு புலியூர் கிராமம் மேற்கு மாம்பலம் உள்ள மனையில் கட்டிடம் கட்டுவதற்காக அமைந்துள்ள மனை பிளாக் எண். சர்வே எண்.20/20 அமைந்துள்ளது. விண்ணப்பதாரரிடம் கட்டிட அனுமதிக்காக கோரப்பட்ட மனைக்கு செல்லும் பொது வழி மேற்கண்ட சாலை விரிவாக்கத்தின் கீழ் வருவதால் மனுதாரருக்கு சொந்தமான8.23 மீட்டர் அகலமும், ஒரு புறம் 1.30 மீட்டர் மறுபுறம் 1.49 மீட்டர் நீளத்திற்கு இடம் காலியாக உள்ளது.
2. மேற்படி இடத்தின் சாலை விரிவாக்கப் பணிக்காக ஆகும் செலவுத் தொகையான ரூ.20,500/– (ரூபாய்இருபதாயிரத்து ஐநூறு மட்டும்) மனுதாரரிடம் வசூல் செய்திடவும்,
3. மனை உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு தரைப்பரப்பு குறியீடு (FSI) பெறாததால், அவ்விடத்திற்கு ‘‘வளர்ச்சி உரிமை சான்றிதழ்’’ (Development Rights Certificate) சென்னை பெரு நகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்.

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டம் 14.05.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு 26.05.2015 அன்று தீர்மான எண்.12/2015ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**நி.ம.உ.து.ந.க. எண் DA-1/1041/2015**

**முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.05.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.226/2015 **பொருள் எண்.04**

**தானபத்திரம்**

மண்டலம்–6, வார்டு–73க்கு உட்பட்ட திரு.மோசின்பாபு, பழைய கதவு எண்.72, புதிய கதவு எண்.139, ஸ்ட்ராஹான்ஸ் சாலை, சூளை பட்டாளம், சென்னை–12, புரசைவாக்கம் கிராமம், சர்வே எண்.2643, 2646, 2584 & R.S.No.2776/2(As per doc.) & R.S.No.2776/12 (As per Patta) சென்னை மாநகராட்சிக்கு தானமாக வழங்கவுள்ள சாலைக்கான நிலத்தினை விண்ணப்பதாரர் சாலை விரிவாக்கத்திற்காக சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்கப்பட உள்ளதாக கோப்பு வரப்பெற்றுள்ளது.

மேற்படி புலம் தனிவட்டாட்சியர்/நிமஉது அவர்களால் 27.04.2015 அன்று பார்வையிடப்பட்டு அளவீடு செய்யப்பட்டதில் புரசைவாக்கம் வட்டம் மற்றும் கிராமம், ஸ்ட்ராஹான்ஸ் சாலை, சூளை பட்டாளம், என்ற முகவரியில் பத்திரப்படி சர்வே எண்.2643, 2646, 2585 (ம) & R.S.No.2776/2(பட்டாப்படி) நிலத்தில் மொத்த பரப்பளவு 104.5 சதுர மீட்டரில் 25.5 சதுர மீட்டர் (நீளம் 7.3 அகலம் 3.5 மீட்டர்) நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் பத்திரப் பதிவு செய்து வழங்க சம்மதம் தெரிவித்து தானப்பத்திரம் வழங்கி திட்ட மற்றும் கட்டிட அனுமதி விண்ணப்பதாரரால் கோரப்பட்டுள்ளது.

புரசைவாக்கம்–பெரம்பூர் வட்டாட்சியர் சி.ஏ.எண்.89/2014,ட்டி.ஆர்/112/2014, நாள். 18.03.2014 ன்படி 12.05.2014–ல் வழங்கப்பட்ட நிரந்தர நிலப்பதிவேட்டின் நகல்படி ஆர்.எஸ்.எண். 2776/12, 104.5 சதுர மீட்டர் நிலம் திரு.கே.மோசின்பாபு என்பவருக்கு சொந்தமானது என தெரிய வருகிறது.

இதில் சாலை விரிவாக்கத்திற்கு சென்னை மாநகராட்சிக்கு 3.5 மீட்டர் அகலத்திற்கு நிலத்தினை தானமாக வழங்க மனுதாரர் சம்மதித்துள்ளார். புலத்தினை நேரில் அளவீடு செய்ததில் மேற்கு பக்கம் புலத்தின் நீளம் 14.9 மீ. அகலம் 7.3 மீ. அளவில் உள்ளது. ஆனால் பட்டாப்படி மனுதாரருக்கு 14.3 மீட்டர் நீளம் 7.3 மீட்டர் அகலமாக 104.5 ச.மீ. சொந்தமானது என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, சாலை விரிவாக்கத்திற்கு ஒதுக்கப்படும் 3.5 மீ. நிலத்துடன் சாலைக்கென ஒதுக்கப்பட்ட மனுதாரரின் அனுபவத்தில் கூடுதலாக உள்ள 0.06 மீ. நிலத்தினை போக மீதமுள்ள 25.5 ச.மீ. நிலத்னை தானப் பத்திரம் மூலம் சென்னை மாநகராட்சிப் பெயரில் பத்திரப் பதிவு செய்த பின்னர் திட்ட மற்றும் கட்டிட அனுமதி வழங்க விதிமுறைகளுக்குட்பட்டு மேல்நடவடிக்கை தொடரலாம் என தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

எனவே,

1. புதிய கதவு எண்.139, பழைய கதவு எண்.72, மண்டலம்–6, வார்டு–73, ஸ்ட்ராஹான்ஸ் சாலை, சூளை பட்டாளம் என்ற முகவரியில் பத்திரப்படி சர்வே எண்.2643, 2646, 2585 (ம) & R.S.No.2776/2(பட்டாப்படி) நிலத்தில் மொத்த பரப்பளவு 1.04.5 சதுர மீட்டரில் 0.25.5 சதுர மீட்டர் (நீளம் 7.3 அகலம் 3.5 மீட்டர்) நிலத்தினை சென்னை மாநகராட்சி பெயரில் பத்திப்பதிவு செய்தப்பின்னர் திட்ட மற்றும் கட்டிட அனுமதி வழங்க விதிமுறைகளுக்குட்பட்டு மேற்படி நிலத்தினை தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளவும்,
2. மேற்படி இடத்தின் சாலை விரிவாக்கப் பணிக்காக ஆகும் செலவுத் தொகையான ரூ.43,000/– (ரூபாய் நாற்பத்தி மூன்றாயிரம் மட்டும்) மனுதாரரிடம் வசூல் செய்திடவும்,
3. மனை உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு ‘‘வளர்ச்சி உரிமை சான்றிதழ்’’ (Development Rights Certificate) சென்னை பெரு நகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்.

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டம் 14.05.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு 26.05.2015 அன்று தீர்மான எண்.14/2015ன்படி இதற்கு நிலைக்குழு(நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/16498/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 07.05.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.227/2015 **பொருள் எண்.05**

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

**05.02.2014** நாளிட்ட சுற்றறிக்கையின்படி, திரு. எம். எத்திராஜன், உதவி கணக்கு அலுவலர், மத்திய கணக்கு குழுமம் (பணியிடம் மண்டலம்–10) அவர்கள் **31.05.2015** அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார். உதவி கணக்கு அலுவலர் பதவியானது சென்னை மாநகராட்சியில் வகுப்பு–2ன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, இவ்வலுவலரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

சென்னை மாநகராட்சியில் திரு. எம். எத்திராஜன், அவர்கள் **03.11.1977** அன்று சுருக்கெழுத்து தட்டச்சராக பணியில் சேர்ந்தார். **20.06.1986** அன்று உதவியாளராகவும், **03.12.2004** அன்று முதல் பிரிவு மேலாளராகவும், **01.12.2011** அன்று முதல் நிர்வாக அலுவலராகவும் மற்றும் **12.09.2012** அன்று முதல் உதவி கணக்கு அலுவலராகவும் பணிபுரிந்து வருகிறார். இவர் பணிபுரிந்த அனைத்து பதவிகளிலும் பணிவரன் முறைப்படுத்தப்பட்டும், தட்டச்சர் பதவியில் **02.11.1979** அன்று பிற்பகல் தகுதிகாண் பருவம் முடித்தவராகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், **06.02.2013** நாளிட்ட ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி தனியர் உதவி கணக்கு அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் உறுதியாக்கம் செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

திரு. எம். எத்திராஜன், உதவி கணக்கு அலுவலர் அவர்கள் சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்த நாளான **03.11.1977** முதல் இது நாள் வரை பணிபுரிந்த துறை / மண்டலங்கள் மற்றும் மத்திய கணக்கு குழுமத்திலும் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கைகள், விசாரணை (ம) தணிக்கை தடைகள் நிலுவையில் இல்லை என்ற விவரம் பெறப்பட்டுள்ளது, சரிபார்ப்பு பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், தனியரின் மீது தணிக்கை தடைகள் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அதற்கு அன்னாரை பொறுப்பாக்கி தனியரின் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி சான்றளிக்கப்பட்டுள்ளது.

தணிக்கை அறிக்கை பெறப்பட்டு அதில் தனியரை பொறுப்பாக்கும் தணிக்கை தடைகள் ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அதனை தனியரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் மேற்கொள்ள சம்மதம் தெரிவித்த தனியரின் உறுதி மொழி கடிதம் பெறப்பட்டு கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின், முன்தணிக்கை செய்யப்பட்டு அறிக்கை பெறப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்கத்தில் தனியர் உறுப்பினராக இல்லை என்று **20.04.2015** நாளிட்ட சான்று பெறப்பட்டுள்ளது.

**24.04.2015** நாளிட்ட சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலர் அவர்களின் கடிதத்தில் திரு.எம்.எத்திராஜன், உதவி கணக்கு அலுவலர், மத்திய கணக்கு குழுமம் (பணியிடம் மண்டலம்–10) அவர்கள் மீது இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**07.05.2015** நாளிட்ட நிதி நிர்வாகப் பிரிவு (தணிக்கை) குறிப்பில், பத்தி–3ல், திரு.எம்.எத்திராஜன், உதவி கணக்கு அலுவலர் அவர்கள், நிர்வாக அலுவலர் மற்றும் உதவி கணக்கு அலுவலராக மண்டலம் மற்றும் துறைகளில் பணிபுரிந்த காலங்களில் **2012–13** ஆம் ஆண்டு முடியவுள்ள தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்திலுள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கைகளின்படி, இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி மொத்தம் ரூ.**270617/–** உள்ளடக்கிய **4** தணிக்கைத்தடைகள் கூட்டுப்பொறுப்பு மற்றும் தனிப்பொறுப்பில் தனியருக்கு மட்டும் ரூ.**90392/–** உள்ளடக்கிய **4** தணிக்கைத்தடைகள் நிலுவை உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. மேலும் **2013–14** முதல் **2015–16**ஆம் ஆண்டு வரை தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையால் வெளியிடப்படவில்லை. அவ்வாறு வெளியிடப்படும் தணிக்கை அறிக்கைகளில், ஏதேனும் தணிக்கைத்தடை பத்திகள் தனியரை சார்ந்தது என்பதனை பின்னர் தெரியவரும்பட்சத்தில் அவர் மீது முழுபொறுப்பு நிர்ணயிக்கப்படும்

எனத் தெரிவிக்கப்பட்டு முதன்மை செயலர் மற்றும் ஆணையருக்கு சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

எனவே "திரு.எம்.எத்திராஜன், உதவி கணக்கு அலுவலர் அவர்கள் மீது கூட்டுப்பொறுப்பில் உள்ள தணிக்கை தடைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமெனவும், அவ்வாறு நேர்த்தி செய்யாத பட்சத்தில் நிதி நிர்வாகப்பிரிவு (தணிக்கை) குறிப்பிடப்பட்டுள்ள தனிப்பொறுப்பிலுள்ள தொகை **ரூ.90,392/–** (ரூபாய் தொண்ணூராயிரத்து முன்னூற்றி தொண்ணூற்றி இரண்டு மட்டும்) மற்றும் தனியர் மீது தணிக்கை தடைகள், நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவற்றிற்கும் தனியரை முழுபொறுப்பாக்கி அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஒய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியரை **31.05.2015** பிற்பகல் முதல் வயது முதிர்வு ஒய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது"

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/17115/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர்அவர்களின் 10.05.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.228/2015 **பொருள் எண்.06**

**தன்விருப்ப ஓய்வு பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில், மாதவரம் நலவாழ்வு மையத்தில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர்.V.அமிர்தசெல்வி, அவர்கள் தன் குடும்ப சூழ்நிலை காரணமாக தன்விருப்ப ஓய்வில் செல்ல விரும்புவதாகவும், தன்னை தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்குமாறு மாண்புமிகு மேயர் அவர்களிடம் 30.1.2015 நாளிட்ட மனு அளித்துள்ளார்.

தனியர் மருத்துவ அலுவலராக திண்டுக்கல் நகராட்சியில் 26.10.1988 முதல் பணியில் சேர்ந்து, பின்னர் பணிமாறுதல் மூலம் ஆவடி நகராட்சியில் 03.03.1989 அன்று பணியில் சேர்ந்து, அதன்பின்னர் பணிமாறுதல் அடிப்படையில், அம்பத்தூர் நகராட்சியில் 20.08.1996 அன்று பணியில் சேர்ந்து, 01.07.1999 முதல் மாதவரம் நகராட்சியில் பணியில் சேர்ந்து தற்போது மாதவரம் நகராட்சி சென்னை மாநகராட்சி எல்லையுடன் இணைக்கப்பட்டதால், சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறைக்கு ஈர்த்துக்கொள்ளப்பட்டு பணிபுரிந்து வருகிறார்.

இவருடைய பிறந்த தேதி 22.06.1959 இதன்படி, தனியரின் வயது தற்போது 55 ஆகும். தனியர் மருத்துவ அலுவலராக 26.10.1988 முதல் பணியில் சேர்ந்து தற்போது 27 வருடங்களுக்கு மேலாக பணிபுரிந்துள்ளார்.

தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் 26.10.1988 முதல் பணிவரன்முறை படுத்தப்பட்டுள்ளது . மேலும் 26.10.1990 முதல் மருத்துவ அலுவலர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர்.V.அமிர்தசெல்வி, மருத்துவ அலுவலர், அவர்கள் மீது இன்றைய தேதி வரையில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 12.03.2015 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டாக்டர்.V.அமிர்தசெல்வி, மருத்துவ அலுவலர், அவர்கள் மீது இன்றைய தேதி வரையில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநர் அவர்களின் 24.04.2015 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் மீது துறையில் ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை என துணை திட்ட ஒருங்கிணைப்பாளர், மாவட்ட குடும்ப நலத்துறை அவர்களின் 24.04.2015 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்ற சான்றும் பெறப்பட்டுள்ளது.

தனியர் பணிபுரிந்த திண்டுக்கல் நகராட்சி, ஆவடி நகராட்சி, அம்பத்தூர் நகராட்சி மற்றும் மாதவரம் நகராட்சி (தற்போது சென்னை மாநகராட்சி எல்லையுடன் இணைக்கப்பட்டது) ஆகிய துறைகளில் இருந்து தனியர் மீது தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் நேர்செய்யப்படாத முன்பணங்கள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

மேலும், தனியர் தன்விருப்ப ஓய்வு கோரி மனு அளித்ததை தொடர்ந்து, தனியரின் பணிப்பதிவேட்டினை முன் தணிக்கைக்கு உள்ளாட்சி நிதித்தணிக்கை துறைக்கு அனுப்பியதில், தனியரின் பணிப்பதிவேட்டை தணிக்கை செய்து இணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை அவர்களின் கடிதம் தொ.க.எண்.எ1/2014, நாள்: 08.04.2015ல் சான்று வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் தனியர் வகித்து வரும் பதவி வகுப்பு 2ன் கீழ் வருவதால் தனியரை பணியிலிருந்து விடுவிக்கும் அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

தனியர் 30.01.2015 அன்று தன்விருப்ப ஓய்வு மனுவை அளித்துள்ளதால், மனு அளித்த நாளிலிருந்து 90 நாட்கள் முடிவடையும் நாளான 29.04.2015 அன்று பிற்பகல் முதல் தனியரை தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கப்படவேண்டியிருந்ததாலும், மேலும், 2015 ஏப்ரல் மாத மன்றக்கூட்டம் 30.04.2015 அன்று நடைபெற இருந்ததாலும், தனியரை 29.04.2015 அன்று பிற்பகல் முதல் பணியிலிருந்து விடுவிக்கும்பொருட்டும், தனியர் மீது நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டும், தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கைகள்

ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அவ்வொழுங்கு நடவடிக்கை ஓய்வூதிய விதிகளின்படி தொடர்ந்து இருக்கும் என்று நிபந்தனைக்குட்பட்டும், மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டும் தனியரை **29.04.2015** பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல **29.04.2015** நாளிட்ட முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின் மூலமாக அனுமதிக்கப்பட்டது.

எனவே, டாக்டர்.V.அமிர்தசெல்வி, மருத்துவ அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை, அவர்களை **29.04.2015** பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/14174/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின்24.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.229/2015 பொருள் எண்.07

**வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

திரு.என்.மருதநாயகம், உதவி வருவாய் அலுவலர் மண்டலம் – 8 (மாற்றுப்பணியிடம் மண்டலம்–2) அவர்கள் சென்னை மாநகராட்சியில் சுருக்கெழுத்து தட்டச்சராக 31.10.1984 அன்று பணியில் சேர்ந்து, 06.12.1994ல் உதவியாளராகவும், 06.09.2006ல் உரிமம் ஆய்வாளராகவும், 14.12.2009 முதல் வரி மதிப்பீட்டாளராகவும் மற்றும் 22.03.2013 முதல் உதவி வருவாய் அலுவலராகவும் பதவி உயர்வுகள் பெற்று பணிபுரிந்து வருகிறார். தனியருடைய பிறந்த தேதி 10.03.1957 இதன்படி தனியரின் வயது முதிர்வு ஓய்வு நாள் 31.03.2015 ஆகும்.

தனியர் சென்னை மாநகராட்சியில் கீழ்கண்ட துறைகளில் பணிபுரிந்துள்ளார்.

| பதவியின் பெயர் | பணியாற்றிய காலம் | பணியாற்றிய துறை/மண்டலம் |
|---|---|---|
| சுருக்கெழுத்து தட்டச்சர் | 31.10.1984 முதல் 05.03.1992 வரை | பொதுத்துறை |
| சுருக்கெழுத்து தட்டச்சர் | 06.03.1992 முதல் 04.05.1992 வரை | தலைமைப்பொறியாளர் அலுவலகம் |
| சுருக்கெழுத்து தட்டச்சர் | 05.05.1992 முதல் 05.12.1994 வரை | சட்டக்குழுமம் |
| உதவியாளர் | 06.12.1994 முதல் 08.03.1999 வரை | பணித்துறை |
| உதவியாளர் | 09.03.1999 முதல் 05.09.2006 வரை | மன்றத்துறை |
| உரிமம் ஆய்வாளர் | 06.09.2006 முதல் 14.12.2009 வரை | வருவாய்த் துறை (தலைமையிடம்) |
| வரி மதிப்பீட்டாளர் | 14.12.2009 முதல் 21.03.2013 வரை | வருவாய்த் துறை /மண்டலம் – 8 |
| உதவி வருவாய் அலுவலர் | 22.03.2013 முதல் 31.07.2013 வரை | வருவாய்த் துறை /மண்டலம் – 8 |
| உதவி வருவாய் அலுவலர் | 01.08.2013 முதல் 18.12.2014 வரை | வருவாய்த் துறை /மண்டலம் – 8 (மாற்றுப்பணியிடம் வருவாய்த்துறை தலைமையிடம்) |
| உதவி வருவாய் அலுவலர் | 19.12.2014 முதல் 31.03.2015 வரை | வருவாய்த் துறை /மண்டலம் – 8 (மாற்றுப்பணியிடம் மண்டலம் – 2) |

திரு.என்.மருதநாயகம், உதவி வருவாய் அலுவலர் மண்டலம்–8 (மாற்றுப்பணியிடம் மண்டலம்–2) அவர்கள் மீது இன்றைய தேதி வரையில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 10.03.2015 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தனியர் மீது கடந்த 5 ஆண்டுகளில் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை எனவும், சென்னை மாநகராட்சி, உள்ளிருப்பு குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை எனவும் 31.3.2015 நாளிட்ட மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கூட்டுறவு சங்கக் கடன் நிலுவை ஏதும் இல்லை என்ற சான்றும் பெறப்பட்டுள்ளது.

தனியர் பணிபுரிந்த மண்டலங்கள் / துறைகளிலிருந்து தனியர் மீது தணிக்கை தடைகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் வழங்கப்பட்டுள்ளது. தனியர் வருவாய்த்துறை தலைமையிடத்தில் மாற்றுப்பணி அடிப்படையில் உதவி வருவாய் அலுவலராக 01.08.2013 முதல் 18.12.2014 வரை பணிபுரிந்த காலத்திற்கு தணிக்கைத்தடை அறிக்கைகள் உள்ளாட்சிநிதித் தணிக்கைத் துறையிடமிருந்து வரப்பெறவில்லை என வருவாய்த்துறை குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறையின் மூலம் தணிக்கைத் தடை ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின்

அவற்றிற்கு தனியரை பொறுப்பாக்கி இழப்பு தொகைகளை தனியரின் ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்து கொள்ளலாம்.

மேலும், தனியர் 31.03.2015 அன்று வயது முதிர்வு பெறுவதை முன்னிட்டு தனியருக்கு ஓய்வு கால பயன்கள் வழங்க தணிக்கை சான்று பெற தணிக்கை துறைக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டதை தொடர்ந்து தனியருக்கு ஓய்வூதிய பயன்களை வழங்க இணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை அவர்களின் கடிதம் நி.மு.எண்.எ4/778/2014, நாள்: 11.03.2015ல் சான்று வழங்கப்பட்டுள்ளது.

தனியர் வகித்து வரும் பதவி வகுப்பு 2ன் கீழ் வருவதால் தனியரை பணியிலிருந்து விடுவிக்கும் அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

எனினும், 2015 மார்ச் மாத மன்றக்கூட்டம் முடிவடைந்துவிட்ட நிலையில் தனியர் மீது நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டும், தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அவ்வொழுங்கு நடவடிக்கை ஓய்வூதிய விதிகளின்படி தொடர்ந்து இருக்கும் என்று நிபந்தனைக்குட்பட்டும் மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டும் தனியரை 31.03.2015 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

எனவே, திரு.என்.மருதநாயகம், உதவி வருவாய் அலுவலர் மண்டலம்–8 (மாற்றுப்பணியிடம் மண்டலம்–2) அவர்களை 31.03.2015 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.''

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>பொ.து.ந.க.எண். ஈ3 / 19062 / 2015</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர்அவர்களின் 15.05.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.230/2015 **பொருள் எண்.08**

**<u>பணியமைப்பு</u>**

அரசாணை (வாலாயம்) எண்.1640, பொது (சிறப்பு–அ) துறை, நாள்: 01.05.2015ன்படி, திரு.இரா.கண்ணன், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர், நிலம் மற்றும் உடைமைத்துறை, சென்னை மாநகராட்சி அவர்கள் , சென்னை மாநகராட்சியில் துணை ஆணையர் (சுகாதாரம்) ஆக அயற்பணியில் 04.05.2015 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
பதிவு மற்றும் தகவலுக்காக வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது”

*******

**<u>பொ.து.ந.க.எண். ஈ3 / 19248 / 2015</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர்அவர்களின்15.05.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.231/2015 **பொருள் எண்.09**

**<u>பணியமைப்பு</u>**

அரசாணை (வாலாயம்) எண்.1640, பொது (சிறப்பு–அ) துறை, நாள்: 01.05.2015ன்படி, திரு.அ.அண்ணாதுரை, இ.ஆ.ப., மண்டல அலுவலர், மண்டலம்–9, சென்னை மாநகராட்சி அவர்கள், சென்னை மாநகராட்சியில் வட்டார துணை ஆணையர் (தெற்கு) ஆக அயற்பணியில் 06.05.2015 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
பதிவு மற்றும் தகவலுக்காக வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/20468/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.05.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.232/2015 **பொருள் எண்.10**

**வயது முதிர்வு ஓய்வு**

டாக்டர்.S.சாந்தி, மண்டல மருத்துவ அலுவலர், மாதவரம் மண்டலம் அவர்கள் மருத்துவ அலுவலராக **23.05.1986** முதல் சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் பணியில் சேர்ந்து பின்னர் **23.11.2011** முதல் மண்டல மருத்துவ அலுவலராக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வருகிறார். இவருடைய பிறந்த தேதி **21.05.1957** வயது முதிர்வு ஓய்வு நாள்: **31.05.2015.**

தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் **23.05.1986** முதல் பணிவரன்முறை படுத்தப்பட்டுள்ளது . மேலும் **12.09.1988** முதல் மருத்துவ அலுவலர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர்.S.சாந்தி, மண்டல மருத்துவ அலுவலர், மாதவரம் மண்டலம் அவர்கள் மீது இன்றைய தேதி வரையில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் **06.05.2015** நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் துறையில் கடந்த **5** ஆண்டுகளில் குற்றவியல்/ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை எனவும், அன்னாரது சம்பள சான்றின்படி எவ்வித நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்ய வேண்டியது இல்லை எனவும், சென்னை மாநகராட்சி, உள்ளிருப்பு குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை எனவும், தெரிவித்து துணை திட்ட ஒருங்கிணைப்பாளரால் சான்றுகள் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்ற சான்றும் பெறப்பட்டுள்ளது.

தனியர் மீது **31.05.2015** வரை தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ நிதி இழப்பீடு இருப்பது தெரியவரின் தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன் மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்து கொள்ள சம்மதித்து துறைதலைவர் முன்னிலையில் ரூ. **20/–** முத்திரை தாளில் ஒப்புதல் அளித்துள்ளார்.

தனியர் பணிபுரிந்த துறை/மண்டலங்களில் இருந்து தனியர் மீது தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் நேர்செய்யப்படாத முன்பணங்கள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் தனியர் வகித்து வரும் பதவி வகுப்பு **2**ன் கீழ் வருவதால் தனியரை பணியிலிருந்து விடுவிக்கும் அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

எனவே, டாக்டர்.S.சாந்தி, மண்டல மருத்துவ அலுவலர், மாதவரம் மண்டலம் அவர்கள் மீது நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு தனியரை **31.05.2015** அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து விடுவிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/19922/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.05.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.233/2015 **பொருள் எண்.11**

**வயது முதிர்வு ஓய்வு**

05.12.2014 நாளிட்ட சுற்றறிக்கையின்படி திரு.சி.ஆர்.விஜயராகவன், உதவி செயற்பொறியாளர், மண்டலம்–1 அவர்கள் வயது முதிர்வு ஓய்வு காரணமாக 31.05.2015 அன்று ஓய்வு பெறவுள்ளார்.

திரு.சி.ஆர்.விஜயராகவன், உதவி செயற்பொறியாளர், மண்டலம்–1 அவர்கள், சென்னை மாநகராட்சியில் ஓவர்சீயராக 02.12.1977 அன்று பணியில் சேர்ந்துள்ளார். பின்னர் 16.12.2010 அன்று உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்று, தற்போது மண்டலம்–1ல் உதவி செயற்பொறியாளராக பணியாற்றி வருகிறார்.

தனியர் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த காலக்கட்டங்களில் கீழ்க் குறிப்பிட்ட துறை/மண்டலங்களிலிருந்து தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத்தடை மற்றும் முன்பணங்கள்/ அலுவலக முன்பணங்கள்/நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் ஒழுங்கு நடிவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்று பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | பதவி | மண்டலம்/துறை | பணியாற்றிய காலம் | |
|---|---|---|---|---|
| | | | முதல் | வரை |
| 1. | ஓவர்சியர் | பழைய மாவட்ட அலுவலகம் (தெற்கு)<br>புதிய மண்டலம்–9 | 02.12.1977 | 21.12.1980 |
| 2. | இளநிலைப்பொறியாளர் | பழைய மாவட்ட அலுவலகம் (தெற்கு)<br>புதிய மண்டலம்–9 | 22.12.1980 | 19.10.1983 |
| 3. | இளநிலைப்பொறியாளர் | பழைய மவாட்ட அலுவலகம் (வடக்கு)<br>புதிய மண்டலம்–8 | 20.10.1983 | 30.09.1988 |
| 4. | இளநிலைப்பொறியாளர் | பழைய மண்டலம்– 5<br>புதிய மண்டலம்–5 | 01.10.1988 | 01.08.1991 |
| 5. | இளநிலைப்பொறியாளர் | பழைய மண்டலம் –3<br>புதிய மண்டலம்–5 | 02.08.1991 | 09.07.1992 |
| 6. | இளநிலைப்பொறியாளர் | மழைநீர் வடிகால்வாய்துறை | 10.07.1992 | 11.03.1993 |
| 7. | இளநிலைப்பொறியாளர் | பழைய மண்டலம் – 7<br>புதிய மண்டலம்–9 | 12.03.1993 | 05.09.1994 |
| 8. | இளநிலைப்பொறியாளர் | பழைய மண்டலம் –10<br>புதிய மண்டலம்–13 | 06.09.1994 | 13.02.1996 |
| 9. | உதவிப்பொறியாளர் | கட்டிடத்துறை | 14.02.1996 | 12.07.2000 |
| 10. | உதவிப்பொறியாளர் | பணித்துறை திட்ட அனுமதி | 13.07.2000 | 09.07.2001 |
| 11. | உதவிப்பொறியாளர் | பழைய மண்டலம் –2<br>புதிய மண்டலம்–5 | 10.07.2001 | 19.02.2010 |
| 12. | உதவிப்பொறியாளர் | கட்டிடத்துறை | 20.02.2010 | 15.12.2010 |
| 13. | உதவி செயற்பொறியாளர் | கட்டிடத்துறை | 16.12.2010 | 28.10.2012 |
| 14. | உதவி செயற்பொறியாளர் | புதிய மண்டலம்–1 | 29.10.2012 | நாளது தேதி வரை |

03.02.2015 நாளிட்ட குறிப்பின்படி தனியர் மழைநீர் வடிகால் துறையில் இளநிலைப் பொறியாளராக பணியாற்றிய காலத்தில் 2001–02ம் ஆண்டு தணிக்கைத் தடைகளில் பத்தி எண்: 12,19 மற்றும் 22 ஆகியவை தனியரின் மீது நிலுவையிலுள்ளதாக முதலில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் தனியர், 1992–93ம் ஆண்டு மட்டுமே மழைநீர்வடிகால் துறையில் பணியாற்றியதாகவும் மேற்சொன்ன தணிக்கைத்தடைகளுக்கு தான் பொறுப்பல்ல என்றும் விளக்கம் அளித்ததை தொடர்ந்து மழைநீர் வடிகால் துறை தற்போது அனுப்பிய குறிப்பில், அளவு புத்தகங்கள், ஆவணங்களை ஆய்வு செய்தததில் மேற்படி தணிக்கைத் தடைகளில் சுட்டி காட்டப்பட்டுள்ள 1999–2002 ஆண்டுகளில் மழைநீர் வடிகால் துறையில் தனியர் பணிபுரியவில்லை என்பதும், மேற்படி 2001–02ம் ஆண்டு தணிக்கைத் தடைகளில் பத்தி எண்:12,19 மற்றும் 22 தணிக்கைத்தடைகளுக்கு திரு.வி.ஆர்.விஜயராகவன், உதவிசெயற்பொறியாளர் என்ற தனியரின் பெயர் உள்ளவர் தான் பொறுப்பு என்றும், தனியர் பொறுப்பல்ல என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மழை நீர் வடிகால் துறை குறிப்பின்படி, உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை கடிதத்தில் முதல் எழுத்து தவறுதலாக ஒரே பெயரை கொண்டுள்ளதால் ஏற்பட்டது. இதனால், மேற்படி தணிக்கை தடைகளிலிருந்து தனியரை விடுவிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

31.03.2015 நாளிட்ட நிதி நிர்வாகப் பிரிவு (தணிக்கை) துறையிடமிருந்து பெறப்பட்ட குறிப்பில் இவ்வலுவலகத்திலுள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கைகளின் படி இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி ரூ.8,67,149/– கூட்டுபொறுப்பிலும், தனியரை தனிப்பொறுப்பாக்கும் தணிக்கைத்தடைகள் ரூ.8,27,483/– என தெரிவிக்கப்பட்டது. மேற்படி அட்டவணையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள தணிக்கைத்தடைகளுக்குண்டான மேற்குறிப்பு உள்ளாட்சி நிதி தணிக்கை துறையிலிருந்து கடிதம் ந.க.எண்.1254/ஈ2/2015. நாள்.29.04.2015ன் மூலம் பெறப்பட்டது.

மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள உள்ளாட்சி நிதித் தணிக்கை கடிதத்தில் அறிக்கையிலுள்ள அட்டவணையின்படி தனியர் கட்டிடத்துறையில் பணியாற்றிய காலத்தில் தனியர் மீது 1997–98ம் ஆண்டின் தணிக்கைத் தடை பத்தி எண்: 92 வரிசை எண்:18ல் தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத்தடையாக ரூ.64,622/– நிலுவையில் உள்ளது என்றும், 1999–2000ம் ஆண்டின் தணிக்கைத் தடை பத்தி எண்: 95 வரிசை எண்: 28ல் நிதியிழப்பில்லாமல் தணிக்கைத் தடையாக நிலுவையிலுள்ளது என்றும் மற்றும் 2011–12ம் ஆண்டின் தணிக்கைத் தடை பத்தி எண்: 15 வரிசை எண்: 3ன் படி மூன்று பேரின் கூட்டு பொறுப்பிலுள்ள மொத்த தொகை ரூ.52,000/– தணிக்கைத்தடையாக நிலுவையிலுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | மண்டலம்/ துறைகள் | ஆண்டு | பத்தி எண் | தணிக்கைக் குட்படுத்தப் பட்ட தொகை ரூ | தடைக்கு பொறுப்பான பணியாளர்களின் எண்ணிக்கை மொத்தம் | உ.செ.பொ அவர்களை பொறுப்பாக்கும் தணிக்கைத்தடை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கட்டடத்துறை | 1997–98 | 92 | 64622 | 1 | 64622.00 |
| 2 | கட்டடத்துறை | 2011–12 | 15 | 52000 | 3 | 17333.00 |
| மொத்தம் | | | | | | ரூ.81,955.00 |

மேற்படியுள்ள தணிக்கைத் தடையை தவிர்த்து, மற்ற துறைகளில் திரு. சி.ஆர். விஜயராகவன், உதவி செயற்பொறியாளர் மண்டலம்–1 அவர்கள் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணைகள் ஏதும் நிலுவையில் இல்லை என 15.04.2015 நாளிட்ட அறிக்கை பெறப்பட்டுள்ளது. தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளோ அல்லது விசாரணைகளோ நிலுவை ஏதும் இல்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ஏதும் இல்லை என 06.04.2015 நாளிட்ட அறிக்கைப் பெறப்பட்டுள்ளது.

தனியர் வகித்து வரும் உதவி செயற்பொறியாளர் பதவி வகுப்பு – 2ன் கீழ் வருவதால் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் மன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் தனியர் சென்னை மாநகராட்சியில் முதன்முதலில் பணியில் சேர்ந்த நாளான 02.12.1977 முதல் நாளது தேதி வரை அனைத்து துறை மற்றும் மண்டலங்களில் பணிபுரிந்த காலங்களில் தனியரை பொறுப்பாக்கும் தணிக்கை தடை மற்றும் முன்பணங்கள் நேர்செய்யப்படாத முன்பணங்கள் ஏதேனும் நிலுவைகள் இருப்பது பின்னர் தெரியவரின் தனியருக்கு வழங்கவிருக்கும் ஓய்வூதிய பயன்கள் மற்றும் அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்து கொள்ள சம்மதம் தெரிவித்து உறுதி மொழி கடிதம் அளித்துள்ளார்.

எனவே, திரு.சி.ஆர்.விஜயராகவன், உதவி செயற்பொறியாளர், மண்டலம்–1 அவர்கள் மீது கூட்டுப்பொறுப்பிலுள்ள தணிக்கைத் தடையில் குறிப்பிட்டுள்ள கூட்டுப் பொறுப்பில் (3 நபர்கள்) மொத்த தொகையான ரூ. 52,000/–ல் தனியரை பொறுப்பாக்கும் தொகை ரூ. 17,333/– மற்றும் தனியரின் மீது நிலுவையிலுள்ள தணிக்கைத் தடையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. 64,622/– ஆக மொத்தம் (17333 + 64622) **ரூ. 81,955/–ஐயும் (ரூபாய் எண்பத்தி ஒன்றாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தைந்து மட்டும்)** மற்றும் இவர் மீது பிற தணிக்கைத் தடைகள், நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதேனும் இருப்பது பின்னர் தெரிய வரும் பட்சத்தில் அவற்றிற்கு தனியரை முழு பொறுப்பாக்கி அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப் படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி தனியரை 31.05.2015 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/20837/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.05.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.234/2015 பொருள் எண்.12

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

05.12.2014 நாளிட்ட பொதுத்துறை சுற்றறிக்கையின்படி திரு.S.தனபால், உதவி செயற்பொறியாளர், மண்டலம்–13 அவர்கள் 31.05.2015 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற உள்ளார்.

திரு. S. தனபால், அவர்கள் முதன் முதலில் சென்னை மாநகராட்சியில் மின்துறையில் தொழிலாளியாக 18.02.1985 அன்று பணியில் சேர்ந்துள்ளார். பின்னர் பல்வேறு துறை மற்றும் மண்டலங்களில் பணிபுரிந்து 09.02.1996 அன்று இளநிலை பொறியாளராக பதவி உயர்வு பெற்றும், உதவி செயற்பொறியாளராக 31.10.2013 முதல் பதவி உயர்வு பெற்று தொடர்ந்து பணி புரிந்து வருகின்றார். தனியர் பணிபுரிந்த துறைகளின் விவரம் பின்வருமாறு:

| வ.எண். | துறை / மண்டலங்கள் | முதவி | பணிபுரிந்த காலம் |
|---|---|---|---|
| 1. | மின்சாரத்துறை | மின் தொழிலாளர் | 18.02.1985 முதல் 31.03.1994 வரை |
| 2 | இயந்திர பொறியியல் துறை | உதவி வரைவாளர் | 01.04.1994 முதல் 21.07.1995 வரை |
| 3 | கட்டிடங்கள் துறை | வரைவாளர் | 21.07.1995 முதல் 09.02.1996 வரை |
| 4 | கட்டிடங்கள் துறை | இளநிலை பொறியாளர் | 09.02.1996 முதல் 25.11.1998 வரை |
| 5 | மண்டலம்–6 | இளநிலை பொறியாளர் (பழைய மண்டலம்–3) | 26.11.1998 முதல் 16.02.1999 வரை |
| 6 | மண்டலம்–9 | இளநிலை பொறியாளர் (பழைய மண்டலம்–7) | 17.02.1999 முதல் 01.08.2007 வரை |
| 7 | மண்டலம்–13 | இளநிலை பொறியாளர் (பழைய மண்டலம்–7) | 01.08.2007 முதல் 31.10.2013 வரை |
| 8 | திடக்கழிவு மேலாண்மை துறை | உதவி செயற்பொறியாளர் | 31.10.2013 முதல் 13.02.2014 முற்பகல் வரை |
| 9 | வட்டார இணை ஆணையர் (தெற்கு) அலுவலகம் | உதவி செயற்பொறியாளர் | 13.02.2014 பிற்பகல் முதல் 03.03.2014 வரை |
| 10 | மண்டலம்–13 | உதவி செயற்பொறியாளர் | 03.03.2014 முதல் இதுநாள் வரை |

தனியர் இளநிலை பொறியாளர், மற்றும் உதவிசெயற்பொறியாளராக, பணிபுரிந்த மேற்காண் துறை / மண்டலங்களுக்கு தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை மற்றும் தணிக்கை தடை ஏதும் நிலுவையில் உள்ளதா என தெரிவிக்கும் பொருட்டு, கடிதம் அனுப்பி பதில் பெறப்பட்டதில், கட்டிடத்துறை, மண்டலம்–9 மற்றும் மண்டலம்–13ல் தணிக்கை தடை உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

17.04.2015 நாளிட்ட தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஏதும் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

14.05.2015 நாளிட்ட விழிப்பு அலுவலரின் குறிப்பின்படி தனியர் மீது விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

14.05.2015 நாளிட்ட ஆய்வர், உள்ளாட்சி நிதி தணிக்கை துறை அவர்களின் அறிக்கை பெறப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

18.05.2015 நாளிட்ட கடிதத்தில், வட்டார துணை ஆணையர்(தெற்கு) அவர்கள் திரு.எஸ்.தனபால், உதவிசெயற்பொறியாளர், மண்டலம் 13 அவர்கள் 31.05.2015 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல இருப்பதாலும் தனியர் வகுப்பு –2யைச் சார்ந்த அலுவலர் என்பதாலும் முதன்மை செயலர் / ஆணையர் அவர்கள் மூலமாக மன்றத்தின் அனுமதி வழங்குமாறு கோரியுள்ளார்.

திரு. S. தனபால், உதவி செயற்பொறியாளர், மண்டலம்–13 அவர்கள் மீது துறை/ மண்டலங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள தணிக்கை விவரங்கள் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | ஆண்டு | பத்தி எண் | தணிக்கைக்குட்படுத்தப்பட்ட தொகை | தடைக்கு பொறுப்பான பணியாளர்களின் எண்ணிக்கை | திரு.எஸ்.தனபால் உ.செ.பொ. அவர்களை பொறுப்பாக்கும் தொகை | குறிப்புரை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1997–98 | 64(1) | சமையல் கூடம் கட்டுமானம் 17.12 இலட்சம் தொகை. ரூ.10 இலட்சத்திற்கு அதிகமான மதிப்பீடு என்பதால் அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | பொறுப்பு அலுவலர் திரு தனபால் உ.செ.பொ. அவர்களின் பெயர் குறிப்பிடப்பட வில்லை. | – | |
| 2. | 1999–2000 | 40 | ரூ220.00 | 1 | ரூ.220.00 | தணிக்கை பத்தி நீக்கம் செய்யப் பட்டுள்ளது. கடிதஎண்.தொ.க.எண் .6/ஈ2/1999–2000/2015 நாள்:18.05.2015 |
| 3. | 2000–2001 | 51 | நிவாரண சமையல் கூடத்தில் பணியாளர்கள் நிவாரண காலங்கள் போக மற்ற காலங்களில் வேறு பணிக்கு அமர்த்தப்படாமல் நிவாரண மையத்திலேயே பணியமர்த்தப்பட்டு ரூ.4,30,000.00 ஊதியம் வழங்கப்பட்டமை | 1 | – | தணிக்கை பத்தி நீக்கம் செய்யப் பட்டுள்ளது. கடிதஎண்.தொ.க.எண் 898/ஈ1/2010 நாள்:27.12.2011 |
| 4 | 2002–2003 | 51 | ரூ.1,32,400.00 | 3 | ரூ.44,133.00 | உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடிதத்தின் படி தணிக்கை பத்தி நீக்கம் செய்யப்பட்டுள்ளது. கடிதஎண்.தொ.க.எண் .6/ஈ2/2002–03/2015 நாள்:18.05.2015 |
| 5 | 2003–2004 | 33 அ | ரூ.40,305.00 | 3 | ரூ.13,435.00 | உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடிதத்தின் படி தணிக்கை பத்தி நீக்கம் செய்யப்பட்டுள்ளது. கடிதஎண்.தொ.க.எண் .6/ஈ2/2003–04/2015 நாள்:18.05.2015 |
| 6 | 2003–2004 | 33 ஆ | ரூ.108192.00 | 3 | ரூ.36,064.00 | உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடிதத்தின் படி தணிக்கை பத்தி நீக்கம் செய்யப்பட்டுள்ளது. கடிதஎண்.தொ.க.எண் .6/ஈ2/2003–04/2015 நாள்:18.05.2015 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | 2003–2004 | 62 | நிவாரண மைய சமையல் கூட இருப்பு பதிவேட்டில் உரிய சான்றொப்பம் இடப்படவில்லை | 1 | | தணிக்கை பத்தி நீக்கம் செய்யப் பட்டுள்ளது. கடிதஎண்.தொ.க.எண் .6/ஈ2/2003–04/2015 நாள்:18.05.2015 |
| 8 | 2006–2007 | 29 | ரூ.1,22,471.00 | 1 | ரூ.25,628.00 | உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடிதத்தின் படி தணிக்கை பத்தி நீக்கம் செய்யப்பட்டுள்ளது. கடிதஎண்.தொ.க.எண் .6/ஈ2/2006–07/2015 நாள்:18.05.2015 |
| | | | | | ரூ.1,19,480.00 | |

தனியர் மீது புதிய மண்டலம் 9 (பழைய மண்டலம் 7) மேற்கண்ட நிலுவையில் இருந்த தணிக்கை பத்திகள் 18.05.2015 நாளிட்ட கடிதங்கள் வாயிலாக நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் மீது மேற்குறிப்பிட்ட மண்டலங்கள்/துறைகள் தவிர்த்து, தனியர் பணிபுரிந்த பிற மண்டலங்கள்/துறைகளில் நேர் செய்யப்படாத முன்பணங்கள்/அலுவலக முன்பணங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் வகுப்பு–2ன் கீழ்வரும் உதவி செயற்பொறியாளர் பதவியில் உள்ளவர்களை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் மன்றத்தின் வசம் உள்ளது.

எனவே, திரு.எஸ். தனபால், உதவி செயற்பொறியாளர், மண்டலம்–13 அவர்களை பொறுப்பாக்கிய தணிக்கை தடைகள் 18.05.2015 நாளிட்ட உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடிதத்தின் படி நீக்கம் செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து, தனியர் மீது தணிக்கை தடைகள், நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவற்றிற்கும் தனியரை முழுபொறுப்பாக்கி அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் தனியரை 31.05.2015 பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/21079/2015**

**ஆணையாளர் (பொறுப்பு) அவர்களின்25.05.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.235/2015 **பொருள் எண்.13**

**வயது முதிர்வு ஓய்வு**

திரு.S.செல்வராஜ், அரங்க அலுவலர், அரங்கத் துறை அவர்கள் விளையாட்டுத்திடல் பயிற்சியாளராக **20.05.1998** அன்று முதல் சென்னை மாநகராட்சி, அரங்கத் துறையில் பணியில் சேர்ந்து, பின்னர் **29.02.2008** பிற்பகல் முதல் அரங்க அலுவலர் பதவியில் பொறுப்பு அலுவலராக பணிபுரிந்து, முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ2/16102/2015, நாள்:12.05.2015ன்படி, அரங்க அலுவலர் பதவியில் பொறுப்பு அலுவலராக பணியில் சேர்ந்த **29.02.2008** அன்று பிற்பகல் முதல் அனைத்து பயன்களுடன் முன்தேதியிட்டு அரங்க அலுவலராக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வருகிறார். இவருடைய பிறந்த தேதி **10.05.1957** வயது முதிர்வு ஓய்வு நாள்: **31.05.2015 .**

தனியருக்கு விளையாட்டுத்திடல் பயிற்சியாளர் பதவியில் **20.05.1998** முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் **21.05.2000** முதல் விளையாட்டுத்திடல் பயிற்சியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

திரு.S.செல்வராஜ், அரங்க அலுவலர், அரங்கத் துறை அவர்கள் மீது இன்றைய தேதி வரையில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் **18.05.2015** நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் மீது சென்னை மாநகராட்சி, வகுப்பு **3** மற்றும் **4** ஆம் நிலைப்பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள் **1983** துணை விதி **9 (2)**ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, குற்றச்சாட்டு குறிப்பாணை பொ.து.ந.க.எண்.ஈ7/31752/2009, நாள்: 18.09.2009 வழங்கப்பட்டு ஒழுங்கு நடவடிக்கையின் இறுதியில் தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டு, முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ7/31752/2009, நாள்: 13.04.2015ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தனியர் மீது இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கைகளோ, விசாரணைகளோ நிலுவையில்லை எனவும், முன்பணம் பிடித்தங்கள் ஏதும் நிலுவையில் இல்லை எனவும், **2008–09** ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையில் பத்தி எண்.**26**ல் அரங்கத்துறை விளையாட்டரங்களில் நடத்தப்படும் கோடைக்கால பயிற்சி முகாமுக்காக செலவு செய்யப்பட்ட தொகைக்கான ரசீதுகளால் காணப்பட்ட பொதுவான குறைபாடுகள் கூடுதலாக செலவு செய்யப்பட்ட தொகை ரூ.**11006/–** தணிக்கை அறிக்கை நிலுவையில் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட தணிக்கை தடைக்கான பதில் **12.05.2015** அன்று நடைபெற்ற கூட்டமர்வில் **21.04.2006** முதல் **10.05.2008** வரை நடத்தப்பட்ட கோடைக்கால பயிற்சி முகாமுக்கான செலவு செய்யப்பட்ட தொகைக்கான செலவு நேர் செய்யப்பட்டுள்ளது என பதிலளிக்கப்பட்டுள்ளதாகவும், **2009–10** ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையில் பத்தி எண்.**6,10,11,12,** மற்றும் **17** ஆகிய பத்திகள் நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், **2010–11** ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையில் அனைத்து பத்திகளும் நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், **2011–12** ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையில் தணிக்கை பத்திகள் **7** (அ,ஆ,இ), **8,9** மற்றும் **13** ஆகிய தணிக்கைகள் நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், 7(a) ரூ.**27255/–** நிலுவையில் உள்ளது. தனியர் மீது தணிக்கை தடை மற்றும் சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் தனியரை பொறுப்பாக்கி அத்தொகையினை ஓய்வூதிய பயன்களில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, மேற்பார்வை பொறியாளர் (பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல்) அவர்களின் **19.05.2015** நாளிட்ட சான்று அளிக்கப்பட்டுள்ளது. மேலும் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்ற சான்றும் பெறப்பட்டுள்ளது.

**19.05.2015** நாளிட்ட மேற்பார்வை பொறியாளர் (பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல்) அவர்களின் குறிப்பில் திரு.எஸ்.செல்வராஜ், அரங்க அலுவலர் அவர்களை பொறுப்பாக்கும் **2008–09** ஆம் ஆண்டிற்கான தணிக்கை தடை அறிக்கை பத்தி எண்.**26**ல் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.**11006/–** ற்கான தணிக்கை தடையை நீக்கம் செய்ய தணிக்கை துறைக்கு பதில் அளிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இத்தணிக்கை தடை பத்தியை நீக்கம் செய்து உள்ளாட்சி நிதி தணிக்கை துறையால் சான்று ஏதும் வழங்கப்படாத நிலையில் இத்தணிக்கை தடை தொகைக்கு பத்தி நீக்கம் செய்யப்படும்வரை தனியர் பொறுப்பாவார்.

தனியர் மீது தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ நிதி இழப்பீடு இருப்பது தெரியவரின் தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன்/ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்து கொள்ள துறைதலைவர் முன்னிலையில் ரூ 20/– முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

சென்னை மாநகராட்சியில் தனியர் வகித்து வரும் பதவி வகுப்பு–2ன் கீழ் வருவதால் தனியரை பணியிலிருந்து விடுவிக்கும் அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

எனவே, திரு.S.செல்வராஜ், அரங்க அலுவலர், அவர்கள் மீது நிலுவையில் உள்ள 2008–09 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை பத்தி எண்.26ல் குறிப்பிடப்பட்டுள்ள தணிக்கை தடையை நீக்கம் செய்ய தவறும்பட்சத்தில் ரூ.11,006/– னையும் மற்றும் தனியர் மீது நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கும் தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்கள் மற்றும் அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு தனியரை 31.05.2015 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் விடுவிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/21762/2013**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின்23.05.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.236/2015 **பொருள் எண்.14**

**சென்னை மாநகராட்சிக்கு புதியதாக முதுநிலை சட்ட அலுவலர் பதவி மற்றும் சுகாதார கல்வி அலுவலர் பதவி மற்றும் இதர பணியிடங்கள் தோற்றுவித்தல் மற்றும் பணி விதிகள் உருவாக்க அரசின் அனுமதி கோர அனுமதி**

சென்னை மாநகராட்சி சட்ட குழுமத்திற்கு ஒரு முதுநிலை சட்ட அலுவலர் பதவியும், சுகாதார துறைக்கு ஒரு சுகாதார கல்வி அலுவலர் பதவியும் தோற்றுவிக்க வேண்டிய அவசியம் கருதி இப்பணியிடங்களை தோற்றுவிக்கவும் மற்றும் பணிவிதிகளை உருவாக்கவும் அரசாணை பெறுவதற்கு முறையே மன்ற தீர்மானம் எண்.500/2013, நாள்: 26.07.2013, 112/2014, நாள்: 19.02.2014 மற்றும் 294/2013, நாள்: 26.04.2013ல் அனுமதி பெறப்பட்டது.

இதன்தொடர்ச்சியாக சென்னை மாநகராட்சிக்கு தோற்றுவிக்கப்படவுள்ள ஒரு முதுநிலை சட்ட அலுவலர் பதவி மற்றும் ஒரு சுகாதார கல்வி அலுவலர் பதவி ஆகிய பணியிடங்களுக்கு பதிலாக சென்னை மாநகராட்சியில் இயந்திர பொறியியல் துறையில் Compositor என்ற பதவியில் ஒப்பளிக்கப்பட்ட 17 பணியிடங்களில், தற்போது காலியாக உள்ள 16 பணியிடங்கள் தேவையில்லாததால், இதிலிருந்து 7 பணியிடங்களை அரசுக்கு ஒப்பளிப்பு செய்வதாக தெரிவித்து அரசுக்கு செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டது.

எனினும் 19.11.2014 நாளிட்ட அரசு கடிதத்தில் சென்னை மாநகராட்சியில் புதியதாக தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள ஒரு முதுநிலை சட்ட அலுவலர் மற்றும் ஒரு சுகாதார கல்வி அலுவலர் பணியிடங்களை பதவி உயர்வு மற்றும் அயற்பணி மூலம் மட்டுமே நிரப்ப வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு சென்னை மாநகராட்சி இயந்திர பொறியியல் துறையில் தற்பொழுது காலியாகவுள்ள 16 Compositor பணியிடங்களையும் ஒப்புவிப்பு (Surrender) செய்யும்பட்சத்தில் மேற்படி செயற்குறிப்பின் மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

சென்னை மாநகராட்சி 10 மண்டலங்களிலிருந்து 15 மண்டலங்களாகவும், 155 வார்டுகளிலிருந்து 200 வார்டுகளாகவும் எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதாலும், மேலும் சென்னை மாநகராட்சிக்கு 3 வட்டார அலுவலகங்கள் கூடுதலாக உருவாக்கப்பட்டுள்ளதாலும், நிர்வாக நலன் கருதி சென்னை மாநகராட்சியில் மூன்று உதவி விளையாட்டு அலுவலர் பணியிடமும் (Asst. Sports Officer),இயக்குநர், பூங்கா (Director of Parks), நிதி அலுவலர் (Municipal Financial Officer) தலா ஒரு பணியிடமும் தோற்றுவிக்க வேண்டி அவசியம் ஏற்பட்டதால் இந்த பணியிடங்களையும் முதுநிலை சட்ட அலுவலர் மற்றும் சுகாதார கல்வி அலுவலர் பணியிடங்களையும் தோற்றுவிக்கவும், இவ்வாறு தோற்றுவிக்கப்படவுள்ள பதவிகளுக்கு பதிலாக சென்னை மாநகராட்சியில் இயந்திர பொறியியல் துறையில் Compositor என்ற பதவியில் ஒப்பளிக்கப்பட்ட 17 பணியிடங்களில் தற்போது காலியாக உள்ள 16 பணியிடங்கள் மற்றும் அரங்கத்துறையில் அரங்க அலுவலர் (Stadium Officer) என்ற பதவியில் ஒப்பளிக்கப்பட்ட 2 பணியிடங்களில் 1 பணியிடத்தையும் அரசுக்கு ஒப்படைப்பதாக தெரிவித்து, அரசின் ஆணை வேண்டி செயற்குறிப்பு அனுப்ப மன்றத்தீர்மான எண்.612/2014, நாள்: 29.12.2014ல் தீர்மானிக்கப்பட்டு அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக அரசு கடிதம் எண்.25244/மா.ந.3/2013–8, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 10.04.2015ல் சென்னை மாநகராட்சிக்கு புதிதாக தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள ஒரு முதுநிலை சட்ட அலுவலர் மற்றும் ஒரு சுகாதார கல்வி அலுவலர் பணியிடங்கள் மட்டுமே (பிற மூன்று பணியிடங்களை தவிர்த்து) பதவி உயர்வு (அ) அயற்பணி மூலம் மட்டுமே நிரப்ப வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறையில் தற்போது காலியாக உள்ள 16 கம்போசிடர் பணியிடங்களையும் ஒப்புவிப்பு (Surrender) செய்யும்பட்சத்தில், மேற்படி செயற்குறிப்பின் மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், ஒரு முதுநிலை சட்ட அலுவலர் பணியிடம் மற்றும் ஒரு சுகாதார கல்வி அலுவலர் பணியிடங்களை தவிர்த்து, மீதமுள்ள பணியிடங்களை தோற்றுவிப்பது தொடர்பாக உரிய விளக்கத்துடன் (proper justification) தனியாக செயற்குறிப்பு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே,

1. சென்னை மாநகராட்சியில் புதிதாக தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள ஒரு முதுநிலை சட்ட அலுவலர் எப்பொழுதும் நிரந்தரமாக அயற்பணி மூலம் மட்டும் நிரப்பவும் மற்றும் ஒரு சுகாதார கல்வி அலுவலர் பணியிடங்களுக்கு பதிலாக (பதவி உயர்வு (அ) அயற்பணி மூலம் மட்டுமே நிரப்ப வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு), சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறையில் தற்போது காலியாக உள்ள 16 கம்போசிடர் பணியிடங்களையும் ஒப்புவிப்பு (Surrender) செய்வதாக, அரசுக்கு தெரிவிக்கவும்,
2. ஒரு முதுநிலை சட்ட அலுவலர் பணியிடம் மற்றும் ஒரு சுகாதார கல்வி அலுவலர் பணியிடங்களை தவிர்த்து, மீதமுள்ள மூன்று உதவி விளையாட்டு அலுவலர் பணியிடமும் (Asst. Sports Officer), இயக்குநர், பூங்கா (Director of Parks), நிதி அலுவலர் (Municipal Financial Officer) தலா ஒரு பணியிடமும் தோற்றுவிப்பது தொடர்பாக உரிய விளக்கத்துடன் (proper justification) தனியாக அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இந்நிகழ்வில் முதுநிலை சட்ட அலுவலர் பணியிடத்தை எப்பொழுதும் நிரந்தரமாக அயற்பணி மூலம் மட்டுமே நிரப்பலாம் என கருதி இதற்கு நியமனக்குழு அனுமதி அளித்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/21208/2015**

**ஆணையர்(பொ) அவர்களின் 25.05.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.237/2015 **பொருள் எண்.15**

**வயது முதிர்வு ஓய்வு**

05.12.2014 நாளிட்ட பொதுத்துறை சுற்றறிக்கையின்படி திரு.வி.தேவராஜன், உதவி செயற்பொறியாளர், 31.05.2015 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற உள்ளார். தனியர் வகுப்பு 2ஐ சார்ந்த அலுவலர் என்பதால், முதன்மை செயலர்/ ஆணையர் மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று தனியரை பணியிலிருந்து விடுவிக்க வேண்டும்.

திரு.வி.தேவராஜன், முதலில் சென்னை மாநகராட்சியில் கட்டிடத்துறையில் வரைவாளராக 14/12/1978 அன்று பணியில் சேர்ந்துள்ளார். பின்னர் பல்வேறு துறை மற்றும் மண்டலங்களில் பணிபுரிந்து உதவி பொறியாளராக பதவி உயர்வு பெற்றும், உதவி செயற்பொறியாளராக 08/02/2010 முதல் கருத்தியலான பதவி உயர்வு பெற்று இது நாள் வரை தொடர்ந்து மண்டலம்–12ல் உதவி செயற்பொறியாளராக 17/12/2014 முதல் பணிபுரிந்து வருகிறார். தனியர் பணிபுரிந்த துறைகளின் விவரம் பின்வருமாறு:

| வ. எண். | துறை / மண்டலங்கள் | பதவி | பணிபுரிந்த காலம் |
|---|---|---|---|
| 1. | கட்டடத்துறை | வரைவாளர் | 14.12.1978 முதல் 18.05.1982 வரை |
| 2 | மண்டலம் –8 | ஆய்வர் | 19.05.1982 முதல் 31.12.1994 வரை |
| 3 | மண்டலம் –9 | உதவி பொறியாளர் | 01.01.1995 முதல் 07.08.1997 வரை |
| 4 | மண்டலம் –8 | உதவி பொறியாளர் | 08.08.1997 முதல் 22.04.1999 வரை |
| 5 | கட்டடத்துறை | உதவி பொறியாளர் | 22.04.1999 முதல் 29.12.2004 வரை |
| 6 | மண்டலம்– 5 | உதவி பொறியாளர் | 30.12.2004 முதல் 11.08.2006 வரை |
| 7 | மழைநீர் வடிகால்துறை | உதவி பொறியாளர் | 11.08.2006 முதல் 07.09.2007 வரை |
| 8 | மண்டலம்– 4 | உதவி பொறியாளர் | 08.09.2007 முதல் 04.02.2009 வரை |
| 9 | பேருந்து சாலைத்துறை | உதவி பொறியாளர் | 04.02.2009 முதல் 16.12.2010 வரை |
| 10 | மண்டலம்–10 | உதவி செயற்பொறியாளர் | 16.12.2010 முதல் 16.02.2012 வரை |
| 11 | மண்டலம்– 8 | உதவி செயற்பொறியாளர் | 16.02.2012 முதல் 18.09.2012 வரை |
| 12 | மண்டலம்–10 | உதவி செயற்பொறியாளர் | 18.09.2012 முதல் 04.04.2014 வரை |
| 13 | வட்டார இணை ஆணையர் (தெற்கு) அலுவலகம் | உதவி செயற்பொறியாளர் | 04.04.2014 முதல் 01.08.2014 வரை |
| 14 | மண்டலம் –15 | உதவி செயற்பொறியாளர் | 02.08.2014 முதல் 16.12.2014 வரை |
| 15 | மண்டலம்– 12 | உதவி செயற்பொறியாளர் | 17.12.2014 முதல் இதுநாள் வரை |

08.05.2015 நாளிட்ட விழிப்பு அலுவலரின் குறிப்பின்படி, தனியர் மீது விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

08.05.2015 நாளிட்ட கடிதத்தில் தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஏதும் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

19.05.2015 நாளிட்ட கடிதத்தில் வட்டார துணை ஆணையர்(தெற்கு) அவர்களின் கடிதத்தில், மண்டலம்–12 ல் பணியாற்றும் திரு.வி. தேவராஜன், உதவிசெயற்பொறியாளர் அவர்கள் மீது எந்தவிதமான ஒழுங்கு நடவடிக்கைகளோ, நீண்டகால முன்பணம் நிலுவையோ மற்றும் தனியர் உதவி பொறியாளர், மற்றும் உதவி செயற்பொறியாளராக, பணிபுரிந்த துறை / மண்டலங்களுக்கு தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை மற்றும் தணிக்கை தடை ஏதும் நிலுவையில் உள்ளதா என தெரிவிக்கும் பொருட்டு கடிதம் அனுப்பி பதில் பெறப்பட்டதில், மண்டலம்–5 மற்றும் மண்டலம்–10ல் தணிக்கை தடை உள்ளதாக தெரிவிக்கப்பட்டதன் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது எனவும் மேலும் உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை 2013–14 மற்றும் 2014–15 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை வெளியிடப்படாத நிலையில், தணிக்கைத்தடையோ முன்பண நிலுவையோ இருப்பது பின்னர் தெரியவரின் அதனை நீக்கம் செய்ய தனியரை பொறுப்பாக்கியுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

19.05.2015 நாளிட்ட வட்டார துணை ஆணையர்(தெற்கு) அவர்களின் கடிதத்தில், தனியர் மீது தணிக்கைத் தடை நிலுவை பத்திகள், நிதி இழப்பீடு இருப்பது பின்னர் தெரியவரின், அத்தொகை முழுவதையும் ஒரே தவணையாக தனியர் திரும்ப செலுத்துவதாக தெரிவித்துள்ளார்

எனவும், தனியர் 31.05.2015 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல இருப்பதாலும் தனியர் வகுப்பு–2யைச் சார்ந்த அலுவலர் என்பதாலும் முதன்மை செயலர் / ஆணையர் மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று ஆணை வழங்குமாறு கோரியுள்ளார்.

19.05.2015 நாளட்ட நிதி நிர்வாகப் பிரிவு குறிப்பின்படி, தனியர், உதவி பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளராக மண்டலம் மற்றும் துறைகளில் பணிபுரிந்த காலங்களில் தனியரைப் பொறுப்பாக்கி, கீழ்காணும் அட்டவணையின்படி மொத்தம் ரூ.5,01,470/– உள்ளடக்கிய 10 தணிக்கைத் தடைகள் கூட்டுப் பொறுப்பு மற்றும் தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ளது எனவும் மேற்கண்ட கூட்டுப்பொறுப்பில் தனியருக்கு மட்டும் ரூ.1,88,579/– உள்ளடக்கிய 9 தணிக்கைத் தடைகள் தனிப்பொறுப்பில் நிலுவையாக உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | மண்டலம்/ துறைகள் | ஆண்டு | பத்தி எண் | தணிக்கைக்குட் படுத்தப்பட்ட தொகை ரூ | தடைக்கு பொறுப்பான பணியாளர்களின் எண்ணிக்கை மொத்தம் | திரு.வி.தேவராஜன், உதவி செயற்பொறியாளர் அவர்களை பொறுப்பாக்கும் தணிக்கைத்தடை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | ப.மண்டலம்–08<br>பு.மண்டலம்–10 | 1997–98 | 75 | 39129.00 | 2 | 19,565.00 |
| 2 | ப.மண்டலம்–08<br>பு.மண்டலம்–10 | 1997–98 | 76 | 21703.00 | 2 | 10,852.00 |
| 3 | ப.மண்டலம்–08<br>பு.மண்டலம்–10 | 1997–98 | 77 | 19717.00 | 2 | 9,859.00 |
| 4 | ப.மண்டலம்–08<br>பு.மண்டலம்–10 | 1997–98 | 78 | 10722.00 | 2 | 5,361.00 |
| 5 | ப.மண்டலம்–08<br>பு.மண்டலம்–10 | 1997–98 | 79 | 6845.00 | 2 | 2,282.00 |
| 6 | ப.மண்டலம்–08<br>பு.மண்டலம்–10 | 1997–98 | 81 | 30930.00 | 2 | 15,465.00 |
| 7 | ப.மண்டலம்–08<br>பு.மண்டலம்–10 | 1997–98 | 82 | 16003.00 | 2 | 8,002.00 |
| 8 | ப.மண்டலம்–08<br>பு.மண்டலம்–10 | 2012–13 | 38 | 19368.00 | 2 | 4,842.00 |
| 9 | ப.மண்டலம்–08<br>பு.மண்டலம்–10 | 2012–13 | 39 | 337053.00 | 3 | 1,12,351.00 |
| மொத்தம் | | | | ரூ.5,01,470.00 | | ரூ.1,88,579.00 |

தனியர் மீது மேற்குறிப்பிட்ட மண்டலம் 10 (பழைய மண்டலம் 8) தவிர்த்து, தனியர் பணிபுரிந்த பிற மண்டலங்கள்/துறைகளில் நேர் செய்யப்படாத முன்பணங்கள்/அலுவலக முன்பணங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, திரு.வி.தேவராஜன், உதவி செயற்பொறியாளர், மண்டலம் 12 அவர்கள் மீது உள்ள தணிக்கை தடைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமெனவும், அவ்வாறு நிவர்த்தி செய்யாத பட்சத்தில் நிதி நிர்வாகப் பிரிவு குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ.1,88,579/– னை (ரூபாய் ஒரு இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து ஐநூற்று எழுபத்து ஒன்பது மட்டும்) பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் மற்றும் உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை 2013–14 மற்றும் 2014–15 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை வெளியிடப்படாத நிலையில், தணிக்கைத்தடை காரணமாக நிலுவைத்தொகை ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின், அவற்றிற்கும் தனியரை முழுபொறுப்பாக்கி அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், தனியரை 31.05.2015 பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ப.து.ந.க.எண்/71/2015</u>**

**<u>ஆணையர் (பொறுப்பு) அவர்களின் 26.05.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.238/2015 **பொருள் எண்.16**

**<u>தானபத்திரம்</u>**

வித்யோதயா பள்ளிகள் சங்கம், கதவு எண். 1, திருமலை பிள்ளை ரோடு, தி. நகர், சென்னை 600 017, T.S.No.4815/1 , Block No.110, தி. நகர் கிராமம் என்ற இடத்திற்கு திட்ட மற்றும் கட்டட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மத்திய வட்டார அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளார். அவர் திட்ட மற்றும் கட்டட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தை ஒட்டிய சாலை ''சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம் II''–ன் படி 18மீ சாலையாக விரிவாக்கம் செய்ய வேண்டும். சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி சாலை விரிவாக்கத்திற்கு நிலத்தினை தான பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி வழங்க இயலும். எனவே, வித்யோதயா பள்ளிகள் சங்கத்தின் மனை உரிமையாளர், தங்களிடத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய 378.65 ச.மீ (1.8மீ X 210.36மீ = 378.65 ச.மீ) நிலத்தினை மாநகராட்சிக்கு தானபத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

எனவே,

(1) மனை உரிமையாளர் வித்யோதயா பள்ளிகள் சங்கத்தின் மூலம் இசைவு பெற்ற தான பத்திரம் மூலம் 378.65 ச.மீ நிலத்தினை சென்னை மாநகராட்சி சாலை விரிவாக்கத்திற்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் செலவீனம் ரூ.6,32,000/– யை ''*ஆணையர் சென்னை மாநகராட்சி*'' என்ற பெயரில் வரைவு காசோலையாக மனை உரிமையாளரிடமிருந்து பெற்று கொள்ளவும்,

(3) தானமாக வழங்கிய நிலத்திற்கு தளப்பரப்பு குறியீடு (FSI) உபயோகப்படுத்தாததால் நிலத்தின் உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு ''வளர்ச்சி உரிமை சான்றிதழ்'' சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரைப்பதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டம் 14.05.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு 26.05.2015 அன்று தீர்மான எண்.15/2015ன்படி இதற்கு நிலைக்குழு(நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/15456/2015**

**ஆணையர் (பொறுப்பு) அவர்களின் 26.05.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.239/2015 **பொருள் எண்.17**

**விளையாட்டு அலுவலர் பதவிக்கு பணிவிதிகள் நிர்ணயிக்கவும் மற்றும் உதவி விளையாட்டு அலுவலர் பதவி தோற்றுவிக்கவும் பணிவிதிகள் நிர்ணயிக்கவும் அரசாணை பெற அனுமதி**

சென்னை மாநகராட்சியில் பொதுமக்கள் தொடர்பு அலுவலர் மற்றும் அரங்க அலுவலர் ஆகிய பதவிகளுக்கு பணி நியமன விதிகள் இதுவரை உருவாக்கப்படவில்லை என்பதால் இப்பதவிகளுக்கான பணி நியமன விதிகளை சென்னை மாநகராட்சி பொதுப்பணி விதிகள் 1970ல் சேர்த்து, உரிய அரசாணை பெறுவதற்கு மன்றத்தீர்மான எண்.362/1998, நாள்: 29.04.1998ல் அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, உரிய அரசாணை வேண்டி 17.05.1998 நாளிட்ட முன்மொழிவு அரசுக்கு அனுப்பப்பட்டு, அரசால் ஆணை ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

ஏற்கனவே அரசுக்கு அனுப்பப்பட்ட முன்மொழிவில் அரங்க அலுவலர் பதவிக்கு கீழ்கண்டவாறு பணிவிதிகள் நிர்ணயிக்கப்பட்டது.

| **Post** | **Method of Appointment** | **Qualification** |
|---|---|---|
| Stadium Officer | a) By direct recruitment (or)<br>b) By promotion from the category of Senior Play Ground Instructor in class III Service of the Corporation Establishment | A degree of any recognized University in Physical Education. |

இந்நிலையில், அரங்க அலுவலர் பதவிக்கு உருவாக்கப்படவுள்ள பணி நியமன விதிகளில் சில மாற்றங்கள் செய்து அரசுக்கு திருத்திய முன்மொழிவு அனுப்ப மன்றத் தீர்மானம் எண்.313/2007, நாள்: 22.06.2007ல் அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து கீழ்கண்ட பணிவிதிகள் உருவாக்க உரிய அரசாணை வேண்டி 26.07.2007 நாளிட்ட முன்மொழிவு அரசுக்கு மீண்டும் அனுப்பப்பட்டது.

| Post | Method of Appointment | Qualification |
|---|---|---|
| Stadiam Officer | a) By direct recruitment (or)<br>b) By promotion from the category of Senior Play Ground Instructor in class III Service of the Corporation Establishment (or)<br>c) By promotion from the category of Play Ground Instructor in class III Service of the Corporation if no qualified official against (b) above is available. | 1. A degree of any recognized University in Physical Education.<br>2. Must have passed Account Test for Subordinate Officers Part-I and Part-II of Account test for Executive Officers.<br>3. Must have passed the Tamil Nadu Government Office Manual Test.<br>**Explanation:**<br>Those appointed by direct recruitment shall pass the Tests (2) and (3) prescribed before declaration of probation. |

இதன் தொடர்ச்சியாக, அரசு கடிதம் எண்.25225/மாந3/2007–1, ந.நி.ம.கு.வ. துறை, நாள். 18.06.2008ல் பொதுமக்கள் தொடர்பு அலுவலர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த கல்வித்தகுதியை ஆய்வு செய்து உரிய முன்மொழிவை அரசுக்கு அனுப்பிவைக்குமாறு அரசால் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது.

எனினும், சென்னை மாநகராட்சியில் பொது மக்கள் தொடர்பு அலுவலர் பதவி அயற்பணி அடிப்படையில் மட்டும் நிரப்பப்பட்டு வருவதாலும், சென்னை மாநகராட்சியிலுள்ள விளையாட்டு திடல்கள் மற்றும் அரங்குகள் போன்றவைகளை பராமரிக்கும் பணிகள் அந்தந்த மண்டல அளவிலேயே மேற்கொள்ளப்பட்டு வந்ததால் அரங்க அலுவலர் பதவிக்கு போதுமான பணிகள் இல்லாத நிலை இருந்ததாலும், பொது மக்கள் தொடர்பு அலுவலர் மற்றும் அரங்க அலுவலர் பதவிகளுக்கு பணி நியமன விதிகளை உருவாக்குவது தொடர்பான கோப்பின் மீது நடவடிக்கை மேற்கொள்வது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

தற்போதும், சென்னை மாநகராட்சியில் பொதுமக்கள் தொடர்பு அலுவலர் பதவி அயற்பணி அடிப்படையில் நிரப்பப்பட்டு வருவதால் தற்போதைய சூழ்நிலையில் இப்பதவிக்கு பணிவிதிகள் உருவாக்குவதை தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம் என கருதப்படுகிறது.

சென்னை மாநகராட்சியில் அரங்கத்துறைக்கு அரங்க அலுவலர் பதவியில் ஒப்பளிக்கப்பட்ட பணியிடம் 2 ஆகும். அரங்க அலுவலர் பதவி வகுப்பு 2ன் கீழ் வகைப்படுத்தப்பட்ட பதவியாகும். வகுப்பு 2ன் கீழ் வரும் பதவிகளுக்கு பணிவிதிகள் உருவாக்கும் அதிகாரம் அரசின் வசம் உள்ளது.

தற்போது, சென்னை மாநகராட்சி எல்லை 10 மண்டலங்களிலிருந்து 15 மண்டலங்களாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதாலும், 3 வட்டார அலுவலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாலும் இந்த வட்டார அலுவலங்களுக்கு உதவி விளையாட்டு அலுவலர் (Assistant Sports Officer) என்ற பதவியில் 3 பணியிடங்களை தோற்றுவிப்பதற்கும், தற்போதுள்ள அரங்க அலுவலர் பதவியை விளையாட்டு அலுவலர் (Sports Officer) என பதவி பெயர் மாற்றம் செய்வதற்கும், இவ்வாறு தோற்றுவிக்கப்படவுள்ள உதவி விளையாட்டு அலுவலர் என்ற பதவியை விளையாட்டு அலுவலர் (Sports Officer) பதவிக்கு ஊட்டப்பதவியாக நிர்ணயிக்க உத்தேசிக்கப்பட்டு, மன்றத்தீர்மான எண்.612/2014, நாள்: 29.12.2014ல் அனுமதி பெற்று, ஆணை வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டதில், இவ்வாறு உதவி விளையாட்டு அலுவலர் (Assistant Sports Officer) என்ற பதவியில் மூன்று பணியிடங்களை தோற்றுவிக்கவேண்டிய அவசியம் குறித்து விரிவான விவரத்தை (Proper Justification) அனுப்பி வைக்குமாறு அரசு கடித எண்.25244/மா.ந.3/2013–8, ந.நி.ம.கு.வ.துறை, நாள்: 10.04.2015ல் கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும், 06.04.2015 நாளிட்ட அரசு கடிதத்தில், விளையாட்டு அலுவலர் பணியிடத்திற்கு பணிவிதிகளை நிர்ணயம் செய்ய விரிவாக ஆய்வு செய்து, மன்றத்தீர்மானத்துடன் உரிய செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி, அரங்கத்துறையில் ஒப்பளிக்கப்பட்டுள்ள விளையாட்டு அலுவலர் (அரங்க அலுவலர்) பதவிக்கும், இத்துறைக்கு தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள உதவி விளையாட்டு அலுவலர் பதவிக்கும் உரிய பணிவிதிகளை நிர்ணயிப்பது குறித்தும், மேலும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய பணிவிதியை பரிந்துரைத்து அதற்கேற்ப மன்றத்தீர்மானம் பெறுவது குறித்தும், அறிக்கை அளிக்குமாறு அரங்க அலுவலர் அவர்களிடம் கோரப்பட்டதைத் தொடர்ந்து, அரங்க அலுவலர் அவர்களின் 15.05.2015 நாளிட்ட குறிப்பில் கீழ்கண்டவாறு அறிக்கை அளித்துள்ளார்.

“அரங்க அலுவலர் பணியிடத்திற்கு தற்போது உள்ள தகுதியானது உடற்கல்வி ஆசிரியருக்கு இணையான தகுதி ஆகும். இக்கல்வி தகுதியுடைவர்கள் விளையாட்டுகளில் அடிப்படை நுணுக்கங்களை மட்டுமே கற்றுத்தர முடியும். விளையாட்டுகளில் புதிய நுணுக்கங்களையும் விளையாட்டு வீரர்களை மாநில மற்றும் தேசிய அளவில் பங்கு பெற செய்யுமளவிற்கு பயிற்சி அளிக்க இயலாது எனவும்,

தற்போது துணை ஆணையர் மற்றும் ஆணையர் அவர்களின் அறிவுரையின் படி மாநில மற்றும் தேசிய அளவில் பங்கு பெற்று வெற்றி பெற வீரர்களை உருவாக்குவதற்கு விளையாட்டுகளில் சிறப்பு பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களை (Coach) நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்,

விளையாட்டுத்துறையின் முக்கிய குறிக்கோள் விளையாட்டு வீரர்களை மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற வைப்பதற்கு தேவையான பயிற்சிகளை அளிப்பதாகும் எனவும், இப்பயிற்சிகளை அளிப்பதற்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் விளையாட்டு அலுவலர்களுக்கு நிர்ணயம் செய்துள்ள தகுதிகளில் பயிற்சியாளருக்கான பட்டயப்படிப்பு (Diploma in Coaching) அவசியமானதாகும் எனவும், பயிற்சியாளருக்கான பட்டயப்படிப்பு (Diploma in Coaching) தேர்ச்சி பெற்றவர்களால் மட்டுமே மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கு பெறும் வீரர்களுக்கு தேவையான பயிற்சிகளை (Advance Coaching) அளிக்க முடியும் எனவும், எனவே தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் பணிவிதிகளை பின்பற்றியும் சென்னை மாநகராட்சியில் ஏற்கனவே உள்ள பணிவிதிகளையும் ஆய்வு செய்து இளைஞர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களின் எதிர்பார்ப்பிற்கேற்ப தேவையான விளையாட்டுப் பயிற்சி அளிக்க விளையாட்டு அலுவலர் (Sports Officer) பணியிடத்திற்கும், உதவி விளையாட்டு அலுவலர் (Assistant Sports Officer) பணியிடத்திற்கும் கீழ்க்கண்ட பணிவிதிகளை உருவாக்குவது அவசியமாகிறது எனவும், தெரிவித்து அறிக்கை அளித்துள்ளார்.

<u>பணிவிதிகள்</u>

| CLASS & CATEGORY | NAME OF THE POST | METHOD OF APPOINTMENT | QUALIFICATION AND EXPERIENCE | SCALE OF PAY |
|---|---|---|---|---|
| II | **Sports Officer** | 1. By direct recruitment | **<u>Academic & Professional Qualification</u>**<br>1. Bachelor's degree in Physical Education.<br>2. A diploma in coaching of not less than 10 months duration awarded by the National Institute of Sports, Sports Authority of India.<br>3. Must be an outstanding sportsman in any discipline participated in National level Meets.<br>4. Account Test for Executive officers and Tamil Nadu govt. office manual test conducted by the TNPSC ( To be acquired during the period of probation)<br>5. <u>Experience</u> Not less than 5 years in coaching activities. | 15600-39100+ G.P 5400 |
| | | 2. By promotion from the Feeder Category | **<u>Academic & Professional Qualification</u>**<br>1. Bachelor's degree in Physical Education.<br>2. A diploma in coaching of not less than 10 months duration awarded by the National Institute of Sports, Sports Authority of India.<br>3. Must have passed the Account Test for Executive officers and Tamil Nadu govt. office manual test conducted by the TNPSC (To be acquired during the period of probation) | 15600-39100+ G.P 5400 |
| II | **Assistant Sports Officer** | By promotion from the Play ground Instructor | **<u>Academic & Professional Qualification</u>**<br>1. Bachelor's degree in Physical Education.<br>2. A diploma in coaching of not less than 10 months duration awarded by the National Institute of Sports, Sports Authority of India.<br>3. Must have passed the Tamil Nadu govt. office manual test conducted by the TNPSC (To be acquired during the period of probation ) | 9300-34800+ 4500 GP |

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் விளையாட்டு அலுவலர் பதவிக்கு கீழ்கண்டவாறு பணிவிதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| CLASS & CATEGORY | NAME OF THE POST | METHOD OF APPOINTMENT | QUALIFICATION AND EXPERIENCE |
|---|---|---|---|
| CLASS-IV Category-1 | District Sports Officer / Warden, Sports Hostel / Manager / Stadia Officer | 1. By direct recruitment | **<u>Academic & Professional Qualification</u>**<br>1. Any Bachelor's degree of not less than 3 years duration.<br>2. A diploma / certificate in coaching of not less than 10 months duration awarded by the National Institute of Sports, Sports Authority of India.<br>3. Must be an outstanding sportsman in any discipline participated in National level Meets. |

| | | | |
|---|---|---|---|
| | | | 4. Account Test for Executive officers conducted by the TNPSC (To be acquired during the period of probation)<br>5. Experience Not less than 5 years in coaching activities.<br>Provided that for persons recruited by direct recruitment the possession of a certificate or diploma in coaching awarded by the National Institute of Sports, Sports Authority of India and experience in coaching activities need not be insisted upon if he / she is a medal winner at National Level Meets. |
| | | 2. By promotion from the category of Coach / Sports Officer in Class-V | **Academic & Professional Qualification**<br>1. Any Bachelor's degree of not less than 3 years duration.<br>2. A diploma / certificate in coaching of not less than 10 months duration awarded by the National Institute of Sports, Sports Authority of India.<br>3. Must have passed the Account Test for Executive officers conducted by the TNPSC (To be acquired during the period of probation) |
| CLASS-V Category-7 | Coach / Sports Officer | By direct recruitment | **Education & Professional Qualification**<br>1. Any Bachelor's degree of not less than 3 years duration from any University, and<br>2. A diploma / certificate in coaching of not less than 10 months duration issued by National Institute of Sports, Sports Authority of India.<br>3. Must have represented the Tamilnadu State in National School Games Federation Competitions or National Championships / Competitions at Junior Level or Senior Level organized by the respective National Federations or National Games or represented any University in Tamilnadu in the Inter-University National Level competitions.<br>A University Degree and a Diploma/Certificate in coaching issued by National Institute of Sports need not be insisted upon for the existing incumbents who do not possess these qualification. |

மேலும் அரசு கடிதம் எண்.25244/மா.நு.3/2013–8, ந.நி.ம.கு.வ.துறை, நாள்: 10.04.2015ல் கோரியவாறு சென்னை மாநகராட்சி வட்டார துணை ஆணையர் அலுவலகங்களுக்கு 3 உதவி விளையாட்டு அலுவலர் (Assistant Sports Officer) பதவிகளை தோற்றுவிக்க வேண்டிய அவசியம் குறித்து விவரம் (Justification) பின்வருமாறு.

தற்போது சென்னை மாநகராட்சி 10 மண்டலங்களிலிருந்து 15 மண்டலங்களாகவும், 155 வார்டுகளிலிருந்து 200 வார்டுகளாகவும், எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதாலும், சென்னை மாநகராட்சிக்கு 3 வட்டார அலுவலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாலும், இவ்வட்டார அலுவலகங்களில் அரங்கத் துறைக்கு கீழ்குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ள, உரிய சார்நிலை அலுவலர்கள் நியமனம் செய்ய வேண்டியுள்ளதாலும், 3 வட்டார அலுவலகங்களுக்கும் உதவி விளையாட்டு அலுவலர் என்ற பதவியில் 3 பணியிடங்களை தோற்றுவிக்கலாம்.

**உதவி விளையாட்டு அலுவலர்களின் பணிவிவரம்**

1. வட்டார அலுவலகங்களில் 5 மண்டலங்களில் உள்ள விளையாட்டுத்திடல்கள் மற்றும் உடற்பயிற்சிக் கூடங்களை கண்காணித்தல்.
2. 5 மண்டலங்களில் உள்ள விளையாட்டுத்திடல் மற்றும் விளையாட்டுத்துறையின் தினசரி பணியினை நிர்வகித்து, விளையாட்டுத்திடல் பயிற்சியாளர், விளையாட்டுத்திடல் உதவியாளர் மற்றும் அனைத்து பணியாளர், அலுவலர்களை வழிநடத்துதல்,
3. விளையாட்டுத்திடல் உருவாக்கவும் பராமரிக்கவும் விளையாட்டு பயிற்சி உபகரணம் பொருத்துவதற்கும் அனைத்து ஏற்பாடுகளும் செய்தல்,
4. பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், பயிற்சி முகாம்கள் நடத்துதல்,
5. பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப விளையாட்டுத்திடலை மேம்படுத்துதல் மற்றும் உபகரணங்கள் வழங்க ஏற்பாடு செய்தல்,
6. விளையாட்டுத்துறைக்குத் தேவையான திட்டங்களை உருவாக்கி பட்ஜெட் தயாரிக்க ஆலோசனை வழங்குதல்,
7. உள்விளையாட்டு அரங்கம், விளையாட்டுத்திடல்கள், நீச்சல் குளங்களை கண்காணித்து விளையாட்டுத்திடல் பயிற்சியாளர் மூலம் மற்ற பணியாளர்களை திறம்பட பணிகளை மேற்பொள்ளச்செய்தல்,
8. அரசு மற்றும் சென்னை மாநகராட்சி விளையாட்டுத்துறைக்கான கூட்டங்களில் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குதல்,
9. புதிய விளையாட்டுத்திடல், புதிய உள்விளையாட்டு அரங்கம் உருவாக்க மண்டல அலுவலர் மற்றும் பொறியாளர்களுக்கு ஆலோசனை வழங்குதல்,
10. வட்டார அலுவலகங்கள் மூலம் விளையாட்டுத்திடல், உடற்பயிற்சிக் கூடங்களை மேம்படுத்த மேற்கொள்ளப்படும் பணி விவரங்களை சேகரித்தல்,
11. ஆணையர், இணை/துணை ஆணையர் நடத்தும் கூட்டங்கள் மற்றும் மன்றக் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்,
12. பணியாளர் பணியமைப்பு சம்பந்தமாக அனைத்து பணிகளையும் மேற்கொள்ளுதல்.
13. சென்னை மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு மாநகராட்சி பணியாளர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், சென்னை மாநகராட்சிக்குட்பட்ட இளைஞர்கள், பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் உள்ளிட்ட பொதுமக்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்துதலில் உதவி புரிதல்.

மேலும், சென்னை மாநகராட்சி தலைமையிடத்தில் அரங்க அலுவலர் பதவிக்கு ஒப்பளிக்கப்பட்ட 2 பணியிடங்களில், வட்டார அலுவலகங்களில் உதவி விளையாட்டு அலுவலர் பதவிகள் தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதால் அரங்க அலுவலர் பதவியில் 1 பணியிடத்தை தக்க வைத்துக்கொண்டு, மற்றொரு பணியிடத்தை அரசுக்கு ஒப்படைப்பு செய்யலாம் என கருதப்படுகிறது.

மேற்கண்டவாறு வட்டார துணை ஆணையர் அலுவலகங்களுக்கு தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள உதவி விளையாட்டு அலுவலர் பதவியில் 3 பணியிடங்களுக்கு, ஒரு மாதத்திற்கு ஆகும் ஊதிய செலவினம் மற்றும் ஒப்படைப்பு செய்யப்படவுள்ள அரங்க அலுவலர் பதவியில் 1 பணியிடத்திற்கு ஒரு மாதத்திற்கு ஆகும் செலவினம் விவரம் பின்வருமாறு.

| Sl. No. | Name of the post and Class | No of Posts Creation | No of posts surrender | Total Salary for creation of post per month | Total salary for surrender of post per month. |
|---|---|---|---|---|---|
| 1. | Assistant Sports Officer (Class-II) 9300 – 34800 +GP 4500 (Scale of Pay) | 3 | -- | Rs.94182/- | -- |
| 2. | Stadia Officer (Class-II) 15600 – 39100 +GP 5400 (Scale of Pay) | -- | 1 | -- | Rs.47930/- |

மேற்கண்டவாறு அரங்க அலுவலர் பதவியில் 1 பணியிடத்தை அரசுக்கு ஒப்படைப்பு செய்வதாலும், உதவி விளையாட்டு அலுவலர் பதவியில் 3 பணியிடங்களை தோற்றுவிப்பதாலும் ஒரு மாதத்திற்கு ஏற்படும் கூடுதல் செலவினமான ரூ.**46252/–** ஐ சென்னை மாநகராட்சி வருவாயிலிருந்து ஈடு செய்து கொள்ளலாம் என கருதப்படுகிறது.

மேலும், சென்னை மாநகராட்சியின் 3 வட்டார அலுவலகங்களில் உதவி விளையாட்டு அலுவலர் பதவியில் 3 பணியிடங்களை தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதால் தலைமையிடத்தில் உள்ள அரங்க அலுவலர் பதவியை விளையாட்டு அலுவலர் (Sports Officer) என பெயர் மாற்றம் செய்யலாம்.

மேற்கண்ட பதவிகளுக்கு பணிவிதிகளை நிர்ணயித்து மன்றத்தீர்மானத்துடன் செயற்குறிப்பை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு, அரசு கடிதம் எண்.7896/மா.ந.3/2015–1, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 06.04.2015ல் அறிவுறுத்தப்பட்டுள்ளதால், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள பணிவிதிகளின் அடிப்படையில் சென்னை மாநகராட்சியில் விளையாட்டு அலுவலர் பதவிக்கும், புதிதாக தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள உதவி விளையாட்டு அலுவலர் பதவிக்கும், கீழ்கண்ட பணிவிதிகளை நிர்ணயித்து அரசின் ஆணை கோரலாம்.

**பணிவிதிகள்**

| CLASS & CATEGORY | NAME OF THE POST | METHOD OF APPOINTMENT | QUALIFICATION AND EXPERIENCE | SCALE OF PAY and Crucial Date |
|---|---|---|---|---|
| II | **Sports Officer** | 1. By direct recruitment | **Academic & Professional Qualification**<br>1. Bachelor's degree in Physical Education.<br>2. A diploma in coaching of not less than 10 months duration awarded by the National Institute of Sports, Sports Authority of India.<br>3. Must be an outstanding sportsman in any discipline participated in National level Meets.<br>4. Account Test for Executive officers and Tamil Nadu govt. office manual test conducted by the TNPSC ( To be acquired during the period of probation)<br>5. Experience<br>Not less than 5 years in coaching activities. | 15600-39100+ G.P 5400 and every year 1st July |
| | | 2. By promotion from the Feeder Category | **Academic & Professional Qualification**<br>1. Bachelor's degree in Physical Education.<br>2. A diploma in coaching of not less than 10 months duration awarded by the National Institute of Sports, Sports Authority of India.<br>3. Must have passed the Account Test for Executive officers and Tamil Nadu govt. office manual test conducted by the TNPSC (To be acquired during the period of probation) | 15600-39100+ G.P 5400 and every year 1st July |
| II | **Assistant Sports Officer** | By promotion from the Play ground Instructor / Coach | **Academic & Professional Qualification**<br>1. Bachelor's degree in Physical Education.<br>2. A diploma in coaching of not less than 10 months duration awarded by the National Institute of Sports, Sports Authority of India.<br>3. Must have passed the Tamil Nadu govt. office manual test conducted by the TNPSC (To be acquired during the period of probation ) | 9300-34800+ 4500 GP and every year 1st June |

மேற்கண்டவாறு அரங்க அலுவலர் பதவிக்கு பணிவிதிகளை நிர்ணயம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதால் ஏற்கனவே மன்றத்தீர்மானம் எண்.313/07, நாள்.22.6.07ல் அரங்க அலுவலர் பதவிக்கு பணிவிதிகள் நிர்ணயிக்கப்பட்டு , அரசாணை வேண்டி அரசுக்கு அனுப்பப்பட்ட செயற்குறிப்பை திரும்ப பெற்றுக்கொள்வதாக அரசுக்கு தெரிவிக்கலாம்.

ஆகவே,

1. ஏற்கனவே, மன்றத்தீர்மான எண்.612/2014, நாள்: 29.12.2014ல் தீர்மானித்தவாறு, சென்னை மாநகராட்சி வட்டார அலுவலகங்களில் அரங்கத் துறைக்கு உதவி விளையாட்டு அலுவலர் என்ற பதவியில் 3 பணியிடங்களை தோற்றுவிக்க அரசாணை வழங்கக் கோரி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்புவதற்கும்,
2. ஏற்கனவே, மன்றத்தீர்மான எண்.612/2014, நாள்: 29.12.2014ல் தீர்மானித்தவாறு, சென்னை மாநகராட்சி அரங்கத்துறையில் தலைமையிடத்தில் உள்ள அரங்க அலுவலர் என்ற பதவியில் ஒப்பளிக்கப்பட்ட இரண்டு பணியிடங்களில் ஒரு பணியிடத்தை ஒப்புவிப்பு செய்வதற்கும்,
3. ஏற்கனவே, மன்றத்தீர்மான எண்.612/2014, நாள்: 29.12.2014ல் தீர்மானித்தவாறு, சென்னை மாநகராட்சியில் அரங்க அலுவலர் என்ற பதவியை விளையாட்டு அலுவலர் என்று பெயர் மாற்றம் செய்வதற்கும்,
4. மேற்கண்டவாறு அரங்க அலுவலர் பதவியில் 1 பணியிடத்தை அரசுக்கு ஒப்படைப்பு செய்வதாலும் உதவி விளையாட்டு அலுவலர் பதவியில் 3 பணியிடங்களை தோற்றுவிப்பதாலும் ஒரு மாதத்திற்கு ஏற்படும் கூடுதல் செலவினமான ரூ.46252/– ஐ சென்னை மாநகராட்சி வருவாயிலிருந்து ஈடு செய்து கொள்ளவும்,
5. மேற்படி, பெயர் மாற்றம் செய்யப்படும் விளையாட்டு அலுவலர் பதவிக்கும், புதிதாக தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள உதவி விளையாட்டு அலுவலர் பதவிக்கும் பணிவிதிகளை கீழ்கண்டவாறு நிர்ணயித்து அரசாணை வழங்கக் கோரி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்புவதற்கும்,

**பணிவிதிகள்**

| CLASS & CATEGORY | NAME OF THE POST | METHOD OF APPOINTMENT | QUALIFICATION AND EXPERIENCE | SCALE OF PAY and Crucial Date |
|---|---|---|---|---|
| II | **Sports Officer** | 1. By direct recruitment | **Academic & Professional Qualification**<br>1. Bachelor's degree in Physical Education.<br>2. A diploma in coaching of not less than 10 months duration awarded by the National Institute of Sports, Sports Authority of India.<br>3. Must be an outstanding sportsman in any discipline partici - pated in National level Meets.<br>4. Account Test for Executive officers and Tamil Nadu govt. office manual test conducted by the TNPSC (To be acquired during the period of probation)<br>5. Experience Not less than 5 years in coaching activities. | 15600-39100+ G.P 5400 and every year 1st July |
| | | 2. By promotion from the Feeder Category | **Academic & Professional Qualification**<br>1. Bachelor's degree in Physical Education.<br>2. A diploma in coaching of not less than 10 months duration awarded by the National Institute of Sports, Sports Authority of India. | 15600-39100+ G.P 5400 and every year 1st July |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 3. Must have passed the Account Test for Executive officers and Tamil Nadu govt. office manual test conducted by the TNPSC (To be acquired during the period of probation) | |
| II | **Assistant Sports Officer** | By promotion from the Play ground Instructor / Coach | **<u>Academic & Professional Qualification</u>**<br>1. Bachelor's degree in Physical Education.<br>2. A diploma in coaching of not less than 10 months duration awarded by the National Institute of Sports, Sports Authority of India.<br>3. Must have passed the Tamil Nadu govt. office manual test conducted by the TNPSC (To be acquired during the period of probation ) | 9300-34800+ 4500 GP and every year 1st June |

**6.** மேற்கண்டவாறு அரங்க அலுவலர் பதவிக்கு பணிவிதிகளை நிர்ணயம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதால் ஏற்கனவே மன்றத்தீர்மானம் எண்.313/07, நாள்.22.6.07ல் அரங்க அலுவலர் பதவிக்கு பணிவிதிகள் நிர்ணயிக்கப்பட்டு, அரசாணை வேண்டி ஏற்கனவே அரசுக்கு அனுப்பப்பட்ட செயற்குறிப்பை திரும்ப பெற்றுக்கொள்வதாக அரசுக்கு தெரிவிப்பதற்கும்,

மேலே 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.(எல்இ3)AA-1/2948/13**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.240/2015 **பொருள் எண்.18**

**சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தில் தீயணைப்பு மீட்புப்பணிகள் நிலையம் இயங்க கட்டிடம் கட்டிக்கொள்ள இடம் அளிக்க அரசிற்கு குறிப்பு அனுப்ப அனுமதி**

தீயணைப்பு மீட்புப்பணிகள் துறை காவல் தலைமை / இயக்குநர் கடிதத்தில் 13.12.2013 அன்று மாவட்ட ஆட்சியர் (ம) காவல் துறை அலுவலர்களுடனான கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வரால் வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் ஒன்றான தி.நகர் தீயணைப்பு மீட்புப்பணி நிலையத்திற்கு நிரந்தர கட்டிடம் கட்டுவதற்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்படும் என்ற அறிவிப்பின் தொடர்ச்சியாக தீயணைப்பு மீட்புப்பணி நிலையம் தற்போது செயல்பட்டு வரும் மண்டலம்–10, கோட்டம்–136ல் தி. நகர் பேருந்து நிலையத்தின் அருகில் தெற்கு உஸ்மான் சாலையை ஒட்டி தியாகராய நகர் கிராமம், அளவை எண்.6777இல் அமைந்துள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான நிலத்தின் மொத்த பரப்பளவான 8 மனை28 ச. அடியில் 2 மனை பரப்பு நிலத்தை இலவசமாக தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைக்கு ஒதுக்கீடு செய்து வழங்குமாறு 31.12.2013–ஆம் நாளிட்ட கடிதத்தில் அரசினை கேட்டுக்கொள்ளப்பட்டது. இப்பொருள் குறித்து தங்களது திட்டவட்டமான குறிப்புரையை அளிக்குமாறு அரசு கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. மேலும், 14.05.2014 –ஆம் நாளிட்ட அரசு கடிதத்தில் அரசாணை எண்.2608, நகராட்சி நிர்வாகத்துறை நாள்.05.12.1945–ன்படி அரசு உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள நிலங்களை தீயணைப்பு துறைக்கு இலவசமாக வழங்கலாம் என குறிப்பிட்டுள்ளது.

மேற்படி தீயணைப்புத்துறை கோரியுள்ள நிலம் அடங்கியுள்ள புலத்தில் தியாகராய நகர் சட்ட மன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடம், மாநகராட்சி மின்துறையின் மின் பொருட்கள் வைக்கப்பட்டுள்ள, முன்னர் மின் உதவிப்பொறியாளரின் அலுவலகமாக இயங்கிவந்த பழைய கட்டடம், உதவி / இளநிலைப்பொறியாளர் அலுவலகக்கட்டடம் ஆகியவை அமைந்துள்ளன. அப்புலத்தில் உள்ள மாநகராட்சி மின்துறைக்கான பழைய கட்டடம் தொன்மையான, பாரம்பரிய கட்டடம் (Heritage Building) என அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

30.04.2014–ஆம் நாளிட்ட முதன்மைச் செயலர்/ஆணையரின் உத்தரவில் தீயணைப்பு மீட்புத்துறையின் கோரிக்கையை ஏற்க இயலாத நிலை உள்ளது என்பது தெரிவிக்க ஆணையிடப்பட்டது. மேலும், தீயணைப்பு துறையின் கோரிக்கையை ஏற்க இயலாத நிலையை உள்துறை முதன்மை செயலருக்கு தெரிவிக்கவும், கள ஆய்வு மேற்கொண்டு மாற்று இடம் இருப்பின் அதனை தெரிவிக்குமாறு மத்திய வட்டார இணை ஆணையர் மற்றும் 10–வது மண்டல அலுவலரை கோருவதற்கு ஆணை பெறப்பட்டது.

தீயணைப்பு–மீட்புப்பணி நிலையம் அமைக்கப்படவேண்டிய அவசர அவசியம் கருதி, 21.07.2014–ஆம் நாளிட்ட மத்திய வட்டார இணை ஆணையர் அவர்கள், முதன்மை செயலர் / ஆணையருக்கு சமர்ப்பித்துள்ள குறிப்புரை ம.அ.10.ந.க.எண்.அ1/8661/2014ல் தீயணைப்பு – மீட்புப்பணி நிலையம் அமைக்க கோரிய விவரங்களை விரைவில் அளிக்குமாறு மண்டல அலுவலகம், பணித்துறை, கட்டடத்துறை ஆகியவற்றை நினைவூட்டவும் , தீயணைப்பு – மீட்புப்பணி நிலையம் அமைக்க மாநகராட்சி / பிற அரசுத்துறைகளுக்குச் சொந்தமான மாற்று இடம் இருப்பின் அதனைத் தெரிவிக்குமாறு மண்டலத்தைக் கோரவும், இது தொடர்பாக உள் (காவல்–17) துறை கூடுதல் செயலர்க்கு விவரங்களை தெரிவித்து கடிதம் அனுப்பவும் துணை ஆணையரி(வமநி)–இன் உத்தரவு வேண்டப்பட்டது.

மத்திய வட்டார இணை ஆணையர் அவர்கள், முதன்மை செயலர் / ஆணையருக்கு சமர்ப்பித்துள்ள குறிப்புரையில் மாநகராட்சி பழைய பகுதி அலுவலகம் எதிரில் பனகல் பூங்கா, தியாகராய நகர் பகுதியில் அளவை எண்.5368–ல் தி.நகர் கிராமம் பரப்பளவு 12842 ச.அடி எனவும் தீயணைப்பு துறைக்கு 4553 ச. அடி நிலத்தினை நிலம் மற்றும் உடைமைத்துறை மூலம் ஒதுக்கீடு செய்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசாணை (நிலை) எண்.35, நாள்.17.02.1997–இன்படி நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்களுக்கு சொந்தமான பட்டா நிலமாக இருக்குமேயானால் (Private Land belonging to Municipal Councils and Municipal Corporation Councils) அது அரசு மற்றும் அரசுத்துறை சார்ந்த நிறுவனத்திற்குத் தேவையானாலும் அதனை அப்போதைய சந்தை விலை மதிப்பு (Market Value at the time) அடிப்படையில் தான் கொடுக்க வேண்டும் என்றும் அவ்வரசாணையில் தெரிவித்துள்ளது.

மேலும், தீயணைப்புத்துறை பரிந்துரை செய்துள்ள நிலமானது (அளவை.எண்.5368) சென்னை மாநகராட்சி தனி நிலம் என்பது நிலம் மற்றும் உடைமைத்துறையின் நிரந்தர நிலபதிவேடு மூலம் கண்டறியப்பட்டது. இந்நிலத்துக்கு சந்தை விலை அடிப்படையில் விற்பனைத் தொகை வழங்க தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை இசைவு தெரிவித்த பின்னர் முன்னுழைவு அனுமதி வழங்கப்படும் என்றும் விற்பனைத் தொகை பெற்ற பின்னர் நிலமாற்றம் குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இவ்வலுவலக கடிதம் நி.ம.உ.து.ந.க.எண். எல்இ3/2948/2013, நாள். 12.8.2014 அன்று கடிதம் மூலம் அரசு முதன்மைச்செயலருக்கு தெரிவிக்கப்பட்டது.

தீயணைப்பு – மீட்புப்பணிகள் துறை இயக்குநர் அவர்கள் அரசு முதன்மைச்செயலருக்கு அனுப்பியுள்ள கடிதம் ந.க.எண்.22604/ஈ3/2013, நாள். 27.8.2014ல் மேற்படி 4553 ச. அடி நிலத்திற்கு இன்றைய தேதியில் சந்தை நிலவரப்படி செலுத்தப்பட வேண்டிய விற்பனை தொகை எவ்வளவு என்பதை மாநகராட்சியை அணுகி விவரம் அறிந்து வர தென் சென்னை மாவட்ட அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாகவும் விவரம் பெற்ற பின் அரசுக்கு பிரேரணை அனுப்பி வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு கூடுதல் செயலாளரின் கடித ந.க.எண்.27/காவல்17/2014–13, நாள். 11.09.2014ல் புல எண். 5368–ல் அடங்கிய 12,842 சதுர அடி நிலத்தில் 4553 சதுர அடி நிலத்தை கிரயத்திற்கு பெறுவதற்கு இன்றைய தேதியில் சந்தை நிலவரப்படி செலுத்தப்பட வேண்டிய விற்பனை தொகை எவ்வளவு எனவும் அவ்வாறு செலுத்தப்படக்கூடிய கணக்கு தலைப்பு மற்றும் இதர விவரங்களை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அதனடிப்படையில் மேற்படி 4553 சதுர அடி நிலத்திற்கு இன்றைய தேதியில் சந்தை விலை மதிப்பினை (Market Value) நிர்ணயம் செய்து அனுப்புமாறு இவ்வலுவலக கடிதம் நி.ம.உ.து.ந.க.எண். எல்இ3/2948/2013,நாள்.20.10.2014 அன்று சென்னை மாவட்ட ஆட்சியரிடம் கோரப்பட்டது.

தீயணைப்பு – மீட்புப்பணிகள் துறை இயக்குநரின் கடிதம் ந.க.எண்.22604/ஈ3/2013, நாள். 19.01.2015ல் மேற்படி மாநகராட்சிக்கு சொந்தமான புல எண்.5368–ல் 4553 ச.அடி நிலத்தை நிலக்கிரயமின்றி ஒதுக்கீடு செய்ய அரசு (நிலை) எண்.18 உள் (காவல்–17) துறை நாள். 6.1.2015–ன்படி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால் அதனடிப்படையில் கிரையத்தொகை ஏதுமின்றி மேற்படி நிலத்தை தீயணைப்பு துறைக்கு நிலமாற்றம் செய்ய ஆவண செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் மேற்படி நிலமானது சென்னை மாநகராட்சி (தனி) நிலம் என்பதால் தற்போதுள்ள நிதி நெருக்கடி காரணமாக தீயணைப்பு மீட்புப்பணித்துறையிடமிருந்து நில கிரையத்தொகை வசூலித்த பிறகு நில மாற்றம் செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே மண்டலம்–10, வார்டு–136 தி.நகர் கிராமம் பிளாக் எண்.122 நில அளவை எண்.5368–ல் பாஷ்யம் சாலை (ம) ஜி. என். செட்டி சாலை சந்திப்பில் 12,842 ச.அடி மொத்த பரப்பளவில் 4553 ச.அடி பரப்பளவு நிலத்தை தீயணைப்பு துறைக்கு சந்தை விலை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய சந்தை விலை மதிப்பிற்கான விவரத்தை மாவட்ட ஆட்சியரிடம் எதிர்நோக்கியுள்ள நிலையில் தற்போது கிரயத்தொகை ஏதுமின்றி நிலமாற்றம் செய்ய அரசாணை நிலை எண்.18 உள் (காவல்–17) துறை, நாள். 6.01.2015ல் அரசாணை வெளியிடப்பட்டுள்ளதால் இது குறித்து அரசிடம் தெளிவுரை கோருவதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.05.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 26.05.2015 அன்று தீர்மான எண்.154/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******